மலர்-4 இதழ்-79 டிசம்பர் 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் ட்ரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# கிருஷ்ணருக்கு கால் அச்சு

# முருகனுக்கு கை அச்சு





# ஒரே வருடத்தில் குழந்தை பாக்கியம் தரும் சிவத்தலம்

வேலூர் மாவட்டத்தில் பாலாற்றங் கரையில் அமைந்த சிவத்தலம் விரிஞ்சிபுரம் இத்தலத்தில், பிரம்மன் சாப விமோசனம் பெற்ற நாள் கார்த்திகை மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமை. ஒவ்வொரு ஆண்டும் அதே நன்னாள் இரவில் பெண்கள் அம்பிகை, பிரம்மன் ஆகியோர் நீராடிய சிம்ம குளத்தில் நீராடி ஈர ஆடையுடன் கோவில் மண்டபத்தில் படுத்து உறங்குவர்.

நீராடி ஈர ஆடையுடன் உறங்கும் பெண்களுக்கு எவ்வித குளிரும் தாக்குவது இல்லை. இவ்வாறு நீராடிய பெண்களின் கனவில் பூக்கள், பழங்கள், புத்தாடைகள் ஆகியவற்றினைத் தாங்கியபடி இறைவன் முதியவர்வடிவில் காட்சி தந்தால் அப்பெண்கள் விரைவில் கருத்தரிக்கும் பாக்கியத்தினை அடைவர் என்பது திண்ணம்.

குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகள், சிம்ம தீர்த்தத்தில் நீராடி, ஈர உடையுடன் ஆலயத்தில் படுத்துறங்கி குழந்தை பாக்கியம் பெற்றவர்கள் அநேகர் இன்றும் இத்தலத்து இறைவனை நன்றியுடன் வணங்கி செல்கின்றனர்.

இத்தலத்திற்கு கார்த்திகை மாதம் கடைசி ஞாயிறு சென்று வழபடுவது மிகச் சிறப்பு.

மேலும் இத்தலத்தைப் பற்றி தெரிந்து கொள்ள 16ம் பக்கம் படிக்கவும்.

# திருவண்ணாமலையில் இன்றும் வலம் வரும் சித்தர்கள்

திருவண்ணாமலை மலையில் ஏராளமான சித்தர்கள் இருந்தார்கள். இப்போதும் கூட அங்கு பல சித்தர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம் கண்களுக்குத்தான் தெரிவதில்லை. பதி னெட்டு சித்தர்களில் ஒருவரானஇடைக்காடர் திரு வண்ணாமலையில் ஜீவசமாதி அடைந்துள்ளார்.

திருவிடை மருதூர், இடைக்காட்டூர் உள்பட பல இடங்களில் இடைக்காடர் ஜீவ சமாதி உள்ள போதிலும் திருவண்ணாமலையில் தான் அவரது பரிபூரண அருள் உள்ளது. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை இவர் கோடி ஆண்டுக ளுக்கு கண்டு தரிசனம் செய்துள்ளார். திருவண் ணாமலை தலத்தில் கார்த்திகை தீபம் ஏற்றப்படும் போது அதை நேரில் கண்டு தரிசனம் செய்தாலே அளவற்ற புண்ணியம் கிடைக்கும் என்பார்கள்.

கோடி தடவைக்கு மேல் கார்த்திகை தீபத்தை தரிசனம் செய்த, இடைக்காடர் பற்றி நினைத்தால், திருவண்ணாமலை ஈசனின் மகிமையைத் தெரிந் தவர் இவர் ஒருவர் தான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இவர் திருவண்ணாமலை பற்றிய ரகசியங்களை முழுமையாக அறிந்தவர் என்று கூறப்படுகிறது. இன்றும் பவுர்ணமி தோறும் திருவண்ணாமலையில் இடைக்காடர் கிரிவலம் வருவதாக கூறப்படுகிறது.

இடைக்காடர் மட்டுமல்ல, மேலும் பல சித்தர் களும் திருவண்ணாமலையில் கிரிவலம் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். கலசப்பாக்கம் அருகில் உள்ள பூண்டியில், பூண்டி சித்தரின் ஜீவசமாதி இருக்கிறது. அந்த சித்தர் பவுர்ணமி தோறும் திருவண்ணா மலையில் கிரிவலம் வருவ தாக சொல்லப்படுகிறது.

வாத்தியார் அய்யா ஸ்ரீமுத்து வடுகநாதர் சித்தர் என்று ஒரு சித்தர் உள்ளார். இவரது ஜீவசமாதி எங்கு இருக்கிறது என்று இதுவரை யாருக்குமே தெரியவில்லை. திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள ஸ்ரீவராகி தீர்த்தத்துக்கு தினமும் இவர் வந்து வழிபட்டு செல்வதாக கூறப்படுகிறது. சீரியா சிவம் பாக்கினி சித்தர் என்று ஒரு சித்தர் திருவண்ணாமலையில் வசித்தார். இவர் பெயரில் மலை ஒன்று அங்குள்ளது. அங்கு இந்த சித்தரின் அருள் இன்னமும் பரவி உள்ள தாக கூறப்படுகிறது.

அதுபோல ஸ்ரீபெத்த நாராயண சித்தர் என்பவரும் பல நூற்றாண்டுகளாக திருவண்ணா மலையில் வாழ்கிறார். யார் கண்களுக்கும் அவர் தன்னைக் காட்டியது இல்லை.

மேலும் வயிறு சார்ந்த நோய்கள் தீரும். திருவல்லத்தில் பிறந்தவர் பாம்பணையான் சித்தர், இவர் மற்ற சித்தர்கள் போல அரூபமாக கிரிவலம் வருவதில்லை. இவர் மனித வடிவம் எடுத்து கிரிவலம் வருகிறார். மார்கழி மாத பவுர்ணமியில் இவர் கிரிவலம் வருவதாக சொல்கிறார்கள். இவரது பார்வை நம் மீது பட்டாலே போதும் விஷக் கடிகளால் உண்டாகும் தோஷங்கள் நீங்கும்.

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திர நாட்களில் கிரிவலம் வருபவர்களுக்கு கணதங்கணான் சித்தர் அருளால் சகல நோய்களும் தீரும். மாத சிவராத்திரி கிரிவலத்தின் போது அர்த்தஜாம பூஜை நேரத்தில் குரு ஓரையில் இவரை பார்க்கும் தரிசனம் கிடைத்தால் நமது ஆத்மா தூய்மை அடையும். இவர்களைப் போல கணக்கற்ற சித்தர் பெருமக்கள் திருவண்ணாமலையில் தினம், தினம் கிரிவலம் வந்து கொண்டு தான் இருக் கிறார்கள். கிரிவலம் செல்லும் போது, இந்த சித்தர் பெருமக்களை நினைத்துக் கொண்டு நடந்தால், நிச்சயம் நல்லதே நடைபெறும்.

வீணான அரட்டை, தெய்வ சிந்தனை யில்லாமல் செல்வது போன்றவற்றால் அருபமாக இருக்கும் சித்தர்களின் சாபமும் ஏற்படும் என்பதால்தால் மலையை சுற்றும்போது பேசாமல் சிவ மந்திரத்தையும், சிவ நாமத்தையும் ஜெபித் துக்கொண்டு செல்ல வலியுறுத்தப் படுகிறது.

# கை அச்சை வரைந்து தீபத்திருவிழா கொண்டாடும் மக்கள்

கிருஷ்ண ஜெயந்தியன்று கிருஷ்ணரின் காலடியை, அரிசி மாவில் வீடுமுழுவதும் பதித்து, கிருஷ்ணர் வீட்டிற்குள் வாசம் செய்வதாக கொண்டாடப்படுகிறது. இது உலகெங்கிலும் கொண்டாடப்பட்டு வரும் நடைமுறையாகும்.

ஆனால் தமிழகத்தில் வள்ளியூர் என்ற இடத்தில் ஒருசில சமுதாய மக்கள் தங்களது வீட்டுச் சுவர் மற்றும் கதவுகளில் சிறு குழந்தையின் கை அச்சை வரைந்து, கார்த்திகை தீபத்திருவிழாவை கொண்டாடுகின்றனர், முருகப்பெருமான் வீட்டில் பிஞ்சுப் பாதத்தின் மூலம் சுவற்றை பிடித்து வலம் வருவதாக இன்றுவரை கடைபிடித்து வருகின்றனர்.

முருகப்பெருமானின் பிஞ்சுக் கைகளை சுவற்றில் பதித்து வீடுமுழுவதும் நடந்து வருவதை மெய்ப்பிக்கும் வகையில் வீட்டு சுவர்கள் மற்றும் வாசல் கதவுகளில் முருகனின் கை அச்சை விதவிதமாக வரைந்து கார்த்திகை தீப திருநாளை போற்றுகின்றனர். கிருஷ்ணருக்கு கால் அச்சு போன்று, முருகனுக்கு கை அச்சை வரைந்து தீபத்திருவிழாவை கொண்டாடுகின்றனர்.

மேலும் தெரிந்து கொள்ள 26ம் பக்கம் படிக்கவும்.



www.aanmeegamalar.com

# நன்மை தரும் ஸ்ரீசக்கரமும் நவாஆவரண பூஜையும்

பூஜை, வழிபாட்டுமுறையில் பல்வேறு வகையில், பல மாறுதல்கள் இருந்தாலும், ஒவ்வொரு முறைக்கும் விதவிதமான பலன்கள் கிடைக்கும். அந்தவகையில் ஸ்ரீசக்கர பூஜை என்பது, மிக உயர்ந்த பூஜையாகும், தெய்வங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே இடத்தில் இருந்து அருளும் மிக உயர்ந்த பூஜை முறையாகும்.

இந்த ஸ்ரீசக்கர வழிபாட்டுமுறை மிகுந்த சக்தி வாய்ந்ததாக இருந்தாலும் கூட அனைவரும் செய்யும் வகையில் எளிமையானதும் கூட....

உலக நன்மைதரும் சக்திதேவிக்கு யந்திர வடிவம் தேவை என்று மகாமேரு யந்திர வடிவை ஏற்படுத்தினார் ஆதிசங்கரர். இதற்கு ஸ்ரீசாயனர், சுரேஸ்வராச்சார்யர், கைவல்யாச்ரமர் போன்ற மகான்கள் தனி வடிவமும் வழிபாட்டு விதிகளும் ஏற்படுத்தினர்.

‘ஸ்ரீவித்யை என்னும் தெய்வக்கலை ரகசியத்தை அறிந்திருப்பவர்கள் பாக்கியசாலிகள்’ என்று சொல்கின்றன, ஸ்ரீசக்கரத்தின் மூல ஆதார நூல்கள். குரு மூலமாக உபதேசம் பெற்று, ஸ்ரீசக்கர பூஜையைச் செய்பவர்கள் இந்த உலகில் மகாபாக்யங்களைப் பெற முடியும் என்கிறது ஸ்ரீவித்யா ரகஸ்யம்.

மறைபுகழும் சவுந்தரிய லகரியினை
வகுத்தெழுதும்
விறல் கெழுமு வேழமுகன் விரைமலர்த்
தாளினைத் தொழுவாம்.

என்ற லிங்க புராண வாசகத்தின்படி

மேரு மலையின் மீது புஷ்பதந்தர் என்பவரே இந்த சக்கர வழிபாட்டை வரை கலையாக எழுதி வைத்தார் எனவும், விநாயகப் பெருமான் அதற்கு முழுவதுமாக வடிவம் கொடுத்தார் என்றும், ஆதிசங்கரரின் குருவான கௌடபாதர்தான் அதை கிரஹித்து அவருக்கு உபதேசித்தருளினார் என்றும் அறியப்படுகிறது.

வெளிநாட்டில் ஆராய்ச்சி

சில ஆண்டுகளுக்கு முன்னர் மாஸ்கோவில் உள்ள கணிதவியல் விஞ்ஞானி அலெக்ஸி குலச்சேவ் என்பவர் ஸ்ரீசக்கரத்தை வைத்து சிறு ஆய்வு நடத்தினார். மிகச்சரியாக வரைந்த ஒரு சக்கரத்தையும், சரியாக வரையாத ஒன்றையும் வெவ்வேறு நண்பர்கள் வீட்டில் வைத்துச் சில




நாட்கள் பொறுத்துப் பார்த்தபோது நல்ல ஸ்ரீசக்கரம் இருந்த வீட்டில் நலனும், அடுத்ததில் நோய் குணமாகாமையும் உள்ள சூழ்நிலையைக் கண்டார்.

இதுபற்றி ஆய்வுக் கட்டுரை எழுதிய குலச்சேவைப் பாராட்டிய அவர் நண்பர் உண்மையாகவே ஸ்ரீசக்கரத்தில் சக்தி உள்ளது என்று பத்திரிகைச் செய்தி வெளியிட அனைவரும் இதன் வரைகலையைக் கண்டு அதிசயித்தனர்.

முற்காலத்திலிருந்தே ஸ்ரீசக்கர பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கோயில்களில் மக்கள் ஈர்ப்புத் தன்மை ஏற்பட்டு புகழ்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. பூர்வ புண்ணியச் சேர்க்கை இருந்தால்தான் கலியுகத்தில் சக்தியை வழிபட்டு மேன்மைக்கு வரமுடியும் என்று ஆதிசங்கரர் தன் சௌந்தர்ய லஹரியில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீசக்கரத்தினை `ஸ்ரீசக்கர ராஜ’ என்றே ஆன்மிகத்தில் சிறந்த மகான்கள் குறிப்பிடுவர். ஒன்பது நிலைகளைக் கொண்ட ஸ்ரீசக்ரத்தினைப் பூஜிக்கும் முறை **நவா ஆவரணம்** என அழைக்கப்படும்!!!

## முதல் ஆவரணம்

இந்த ஆவரணத்தின் கிரகமாக வியாழ பகவான் விளங்குகிறார். முதல் ஆவரணத்தை வணங்குபவர்களுக்கு எல்லா செல்வங்களும் நிலைக்கும். தடைகள் நீங்கும். புத்தி பலம் கூடும்.

## இரண்டாவது ஆவரணம்


ஆன்மிகமலர் மெயில் புக்

பதினாறு யோகினிகள் வாசம் செய்யும் தாமரைப் பூ ரூபம் இது. மனதின் தீய எண் ணங்கள் நீங்கும். அகம் தூய்மையாகும்.

### மூன்றாவது ஆவரணம்

பூஜிப்பவரின் மனதை ஒருமுகப்படுத்தும் தேவதைகள் எட்டு தாமரை இதழ்களில் வாசம் செய்வதாக ஐதீகம். இவர்கள் பக்தியின் மேன்மையை பக்தர்களுக்கு அளிப்பவர்கள்.

### நான்காவது ஆவரணம்

இந்த ஆவரணத்தில் 14 யோகினிகள் வாசம் செய்கின்றனர். சந்திரன் வடிவில் அன்னை காட்சி தருவாள். புத்திர பாக்கியத்தை அளிக்கும் ஆவரணம் இது.

### ஐந்தாவது ஆவரணம்

பத்து கோணங்களில் பத்து யோகினிகள் வாசம் செய்கின்றனர். உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் தரும்.

### ஆறாவது ஆவரணம்

அன்னை சூரியனின் உருவில் இருக்கும் ஆவரணம் இது. பொறாமை இருளை அகற்றி, அருளின் ஒளியை ஏற்ற உதவும்.

### ஏழாவது ஆவரணம்

புதன் கிரகம் அமையப்பெற்ற ஆவரணம். இந்த ஆவரணத்தை பூஜிப்பதின் மூலம் ஆத்ம ஞானம் பெருகும்.

### எட்டாவது ஆவரணம்

மகா திரிபுரசுந்தரியாக அன்னை வீற்றிருக் கும் ஆவரணம் இது. அங்குசம், பாசம், கரும்பு வில் மற்றும் பாணம் ஆகிய அம்பாளின் நான்கு ஆயுதங்கள் இந்த ஆவரணத்தில் வழிபடப்படுகின்றன.

### ஒன்பதாவது ஆவரணம்

பேரின்பத்தை நிலைபெறச் செய்யும் ஆவரணம் இது. ஸ்ரீகாமேஸ்வரியாகிய லலிதா, காமேஸ்வரன் பரமேஸ்வரன் வீற்றிருக்கும் இந்த ஆவரணத்தைப் பூஜிப்பதின் மூலம் சகல நன்மைகளும் ஏற்படும்!! இந்த பூஜையை தரிசனம் செய்வதால் சகல தோஷம்நீங்கி, சகலமும அம்பிகை அருளால் சித்திக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் பெண்கள் செய்ய வேண்டிய பூஜை (ஆண்களும் செய்யலாம்) இதற்கு மிஞ்சும் யந்திரம் வேறில்லை. முறையான யந்திரத்தை குரு மூலமாக வாங்கி பூஜிப்பவர்க்கு அளப்பரிய நன்மைகள் நிச்சயம் உண்டாகும்.

ஸ்ரீ சக்கரம் பூஜிக்கப்படும் வீடு சுத்தமாக நல்ல காற்றோட்டம் உடையதாக இருக்க வேண்டும். பூஜை அறையின் மேற்பகுதிகளில் மகாலட்சுமிக்கு உரிய மலர்கள், விருட்சங்களை வரைந்து அழகுபடுத்தி வைக்க வேண்டும். பசு, சிம்மம், சங்கு, சக்கரம், தாமரை, குதிரை, யானை, ஸ்வஸ்திகம் போன்ற குறிகளை அமைக்கலாம். பூஜை அறைக்குள் முன்னோர்கள் படத்தை மாட்டி வைக்காமல் வேறு சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்கும் குருதேவர் படங்கள், பீடாதிபதிகள் தரும் பஸ்மம், குங்குமப் பிரசாதம் போன்றவற்றை ஸ்ரீசக்கரம் அருகில் வைக்கக் கூடாது.

வெள்ளிக்கிழமை, அமாவாசை, பௌர் ணமி, அஷ்டமி, பூர நட்சத்திர நாள், பூஜை செய்பவருடைய ஜென்ம நட்சத்திர நாளில் ஸ்ரீ சக்கரத்துக்காக உபதேசிக்கப்பட்ட மந்திரத்தைத் தவறாமல் பூஜையுடன் ஜெபிக்க வேண்டும்.

வீட்டில் சிராத்தம் செய்வதாக இருந்தால், அன்று முன்னோர் வழிபாடு செய்த பிறகே ஸ்ரீசக்ர வழிபாடு செய்தல் வேண்டும்.

பூஜை அறையைச் சுத்தமாக வைத்துக் கொண்டு சுபயோக சுப தினத்தில் ஸ்ரீசக்ர வழிபாடு தொடங்கி யந்திரஸ்தாபனம் (பிரதிஷ் டை) செய்து கணபதி, நவகிரகங்கள், ராசி, நட்சத்திரத் தெய்வங்களின் துதிகளோடு மலர், குங்கும அர்ச்சனையும் செய்து வழிபட்டால் நலம் பெருகும். இப்பூஜை நிறைவில் அர்க்கிய பிரசாதம் பெறுவது பெரும் புண்ணியம்.

இப்பூஜை காஞ்சி காமாட்சிதலத்தில் பௌர்ணமி நள்ளிரவு நடைபெறும்.

திருப்போரூர் செம்பாக்கம் அருள்மிகு ஸ்ரீபாலாம் பிகை ஸ்ரீமத் ஔஷத லலிதாம்பிகை ஆலயத்தில் (தொடர்பு எண் 09789921151) பௌர்ணமியில் காலை நடைபெறும் தரிசித்து ஆனந்தம் அடைவோம்.



www.aanmeegamalar.com

# பக்தியை விஞ்சிய பக்தி

திருவிடைமருதூர் சிவன்கோயிலுக்காக விளைந்த எள்ளை, கோயிலின் எதிரே காயவைத்திருந்தனர். ஒருவன் வந்து ஒரு கைப்பிடி எள்ளை எடுத்து வாயில் போட்டு மென்றுகொண்டிருந்தான், இதனைப் மன்னன் வரகுண பாண்டியன் பார்த்துவிட்டான். ஆனால், எள்ளை அள்ளியவனோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் அதைச் சாப்பிடுவதிலேயே குறியாயிருந்தான்.

மன்னன் அவனை அழைத்து, "சிவாலயத்தின் எள்ளைச் சாப்பிட்டால் தண்டனை கிடைக்கும், தெரியுமா"? என்றான்.

"தெரியும்" என்று நிதானமாகச் சொன்னதுடன் கிடைக்கப் போகும் தண்டனையை அனுபவிக்கக் காத்திருந்தவனைப் போல் சலனமில்லாமல் காணப்பட்டான்.

"உனக்கான தண்டனை என்னவென்று தெரியுமா?" என்று கேட்டான் அரசன்.

"தெரியும்... அடுத்த பிறவியில் எருதாகப் பிறந்து, இந்த ஆலயத்தின் வேலைகளுக்காகப் பயன்படுவேன்"! என்றான் மகிழ்வோடு.

கோபத்துடன் "வாயைத் திற!" என்றான் அரசன். சொல்பவன் அரசனாயிற்றே என்று பயந்து, நடப்பது நடக்கட்டும் என்று வாயைத் திறந்தான் அவன்.

பாண்டியன் உடனே அவன் வாயில் விரலைவிட்டு நாலு எள்ளை எடுத்துத் தன் வாயில் போட்டுக் கொண்டு சொன்னான்:

"நீ எருதாகப் பிறந்து ஆலயத்துக்கு உழைக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதால், நானும் உன் வாயிலிருந்த எள்ளை முழு மனதோடு எடுத்துத் தின்றேன்.

நானும் எருதாகப் பிறந்து உனக்கு ஜோடியாக வந்து நாமிருவரும் சிவாலயத் தொண்டுசெய்து மகிழலாம்" என்றான்.

பக்தி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் இருக்க முடியுமா?





www.aanmeegamalar.com

# தீயாக காட்சிதரும் சக்தி தேவி



இந்தியாவில் உள்ள சக்திப் பீடங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் வித்தியாசப் படுவதுண்டு, இதில் இமாச்சலிலுள்ள ஜ்வாலமுகி சக்தி பீடத்தில் நெருப்பு மட்டுமே சக்தி தேவியாக காட்சி தருகிறது.

கற்களில் சுயம்புவாக தோன்றிய சிலைகள், மண்ணால் ஆன சிலைகள் என்று பல் வேறுவகையான சிலைவடிவங்கள் இருந்தாலும், இந்த கோவிலில் மட்டும் நெருப்பு சுயம்புவாக சுடர் விட்டு எரிந்து கொண்டிருப்பது சிறப்பு, ஒன்று அல்ல இரண்டல்ல ஒன்பது இடங்களில் நெருப்பு சுயம்புவாக சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

சக்திபீடங்களில் நெருப்பை கொண்ட பீடம் இது மட்டுமே, இத்திருக்கோயில் ஜ்வாலாஜி என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜ்வாலாமுகி கோயில் காங்க்ரா பள்ளத்தாக்கு பகுதியிலிருந்து 30 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. நெருப்பு கக்கும் வாயுடன் கூடிய முகத்தை கொண்ட கடவுள் என்ற பொருளில் 'ஜ்வாலாமுகி' என்று இந்த கோயிலின் பெண் தெய்வம் அழைக்கப்படுகிறது.

இயற்கை எரிவாயு வெளிவரும் ஒரு தாமிரக்குழாய் ஒன்று இந்த புராதன ஆலயத்தின் விசேஷமாக சொல்லப்படுகிறது. இதேபோன்று ஒன்பது நெருப்பு வெளிவரும் அறை அமைப்புகள் இந்த கோயிலில் காணப்படுகின்றன. மஹாகாளி, அன்னபூர்ணா, சண்டி, ஹிங்லஜ், பிந்தியபஸ்னி, மஹாலட்சுமி, சரஸ்வதி, அம்பிகை மற்றும் அஞ்சிதேவி என்று சக்தியின் ஒன்பது ரூபங்களின் பெயர்கள் இந்த ஜுவாலை அமைப்புகளுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.





தலபுராணக்கதைகளின்படி, சிவனை மதியாது யாகம் செய்த தந்தையான தட்சனை திருத்துவதற்காக பார்வதி தேவி புறப்பட்டு தோல்வியடைந்து, யாக குண்டத்தில் தனது உயிரை மாய்த்துக் கொண்டதை அறிந்த சிவன், பித்தனாகி சதி தேவியின் உடலை தோளில் சுமந்து ஆக்ரோஷமாக ஆடிய நடனத்தில், சதி தேவியின் உடல் பாகங்கள் சிதறி விழுந்த இடங்களை சக்தி பீடம் என்று அழைக்கப் படுகிறது.

அந்தவகையில் 'சதி'யின் நாக்கு விழுந்த இடத்தில் இத்தலம் கோயிலாக உருவாக் கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. சதி தெய்வம் சிறு சிறு நெருப்பு ஜுவாலைகளாக இந்த கோயிலில் வீற்றிருப்பதாகவும் ஐதீகமாக நம்பப்படுகிறது. நீலநிற நெருப்பு ஜுவாலைகள் இந்த கோயிலிலுள்ள புராதன பாறை இடுக்குகள் வழியே தொடர்ந்து வெளிவந்தவண்ணம் உள்ளன.

மாற்று மதத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவர், இந்த நெருப்பு ஜூவாலைகளை மக்கள் தெய்வமாக வழிபடுவதை ஏற்காமல், மிகப்பெரிய இருப்பு திரையைக் கொண்டு மறைத்தும், இந்த நெருப்பு ஜூவாலைகளை அனைப்பதற்கு அருகில் இருந்த அருவியை மடை மாற்றி அணைக்கவும் முற்பட்டான், ஆனால் அந்த தீ ஜூவாலைகள் அணையாமல் எரிந்து கொண் டிருந்தது, இந்த பாதகச் செயலைச் செய்த மன்னனின் கண்பார்வை மெல்ல மங்கத் தொடங்கியதும், தன் தவறை உணர்ந்து, மன முருகி தேவியை வழிபட்டு கோயிலுக்கு தங்க குடை ஒன்றை காணிக்கையாக கொடுத்தான்.

ஆனால் அந்த தங்க குடை மாற்று உலோக மாக மாறியதுடன் உடைந்தும் விட்டது (இன்றும் உடைந்த அந்த குடையை காட்சிக்காக வைத்துள்ளனர்)

இந்தக் கோயிலில் அபிஷேகம், ஆராதனை எதுவும் நடைபெறுவதில்லை, தேங்காய் மட்டுமே உடைக்கப்படுகின்றது.


ஆன்மிகமலர் மெயில் புக்

# 108 யட்ஷணிகளும் பெயர்களும்

யட்சர்கள் மற்றும் யட்ஷினிகள் என்பவர்கள் மனிதனைவிட சற்று சக்தி வாய்ந்தவர்கள் என்று புராணங்களில் கூறப்படுகிறது, ஆண்களை யட்சர்கள் என்றும், யட்சினி என்பவர்கள் பெண் பாலினத்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

யட்சினிகள் மனிதர்களை விட உயர்சக்தி கொண்டவர்களாகவும், தேவர்களை விட குறைந்த சக்தி படைத்தவர்களாகவும், பண்டைய இந்து சமய புராணங்கள் கூறுகிறது.

இவர்களைப் பற்றி பௌத்தம், சமண சமய நூல்களும் கூறுகிறது. யட்சர்களும், யட்சினிகளும் பூமிக்கடியில் உள்ள குபேரனின் அனைத்து செல்வங்களை காக்கும் அழகு மிக்க ஆண், பெண்களாவார்கள்.

இதில் பெரும்பாலும் பெண்களைதான் முன்னிறுத்தி பல்வேறு செவிவழிக் கதைகள் உள்ளன. இதை மெய்பிக்கும் வகையில் யட்சினிகள் வழிபாடும் ஒருசில மந்திர தந்திரங்களுக்கு பயன்படுத்துகின்றனர்.

உத்தமரேஷ்வர தந்திர நூலில் 36 வகையான யட்சினிகளையும், அவர்களுக்குரிய மந்திரங்களும், சடங்குகளையும், படையல்களையும் பற்றி விளக்குகிறது.

யட்சினிகளில் நல்ல யட்சினிகளும் உண்டு, தீய யட்ஷினிகளும் உண்டு. மந்திர தந்திரங்களில் தேர்ந்தவர்கள் இந்த யட்சினிகளை வைத்து பல்வேறு சித்து வேலைகளும் செய்கின்றனர்.

இந்த வகையில் 108 யட்ஷினிகளின் பெயர்களைப் பார்ப்போம்.

1. உச்சிஷ்ட யட்ஷணி
2. குபேர யட்ஷணி
3. தனதா ரதிபிரியா யட்ஷணி
4. கனகவதி யட்ஷணி
5. அனுராஹினி யட்ஷணி
6. ஸ்வர்ண ரேகா யட்ஷணி
7. பத்மினி யட்ஷணி
8. ஜலவாஸினி யட்ஷணி
9. ஸுர சுந்தரி யட்ஷணி
10. ஹம்ஸி யட்ஷணி
11. லக்ஷ்மி யட்ஷணி
12. தனதா யட்ஷணி
13. மஹாலக்ஷ்மி யட்ஷணி
14. ராஜ்யப்ரதா யட்ஷணி
15. ஜயா யட்ஷணி
16. சர்வ கார்ய ஸித்திதா யட்ஷணி
17. அசுபக்ஷயாகாரிணி யட்ஷணி
18.போக யட்ஷணி
19.பில்வ யட்ஷணி
20.சந்த்ரத்வாவட யட்ஷணி
21.தனதாபிபல யட்ஷணி
22.ஜயா அர்க்க யட்ஷணி
23.ஸந்தோஷச்வே தகுஞ்ஜா யட்ஷணி
24.ராஜ்யதா துளசி யட்ஷணி
25.ராஜ்யதா அங்கோல யட்ஷணி
26.குச யட்ஷணி
27.சந்த்ராம்ருத யட்ஷணி
28.ஸ்வாமீச்வரி யட்ஷணி
29.மஹா மாயா போக யட்ஷணி
30.த்யாகா யட்ஷணி யட்ஷணி
31.ஸர்வாங்க ஸுலோசனா யட்ஷணி
32.பூத லோஷனா யட்ஷணி
33.ஜலபாணி யட்ஷணி
34.மாதங்கேச்வரி யட்ஷணி
35.ஹடலே குமாரி யட்ஷணி
36.ஜனரஞ்சனி யட்ஷணி
37.மனோகர யட்ஷணி
38.சந்திரிகா யட்ஷணி
39.காமேஸ்வரி யட்ஷணி
40.ரதிபிரியா யட்ஷணி
41. ஸ்வர்ணவதி யட்ஷணி
42.பண்டார பூர்ணா யட்ஷணி
43.பத்மாவதி யட்ஷணி
44.சிஞ்சி பிஷாசீனீ யட்ஷணி
45.கர்ண பிஷாசீனீ யட்ஷணி
46.வடயட்ஷணி யட்ஷணி
47.விப்ரமா யட்ஷணி
48.மஹா நந்தா யட்ஷணி
49.விஷாலா யட்ஷணி
50.விசித்ரா யட்ஷணி
51.சாமுண்டா யட்ஷணி
52.மதனா யட்ஷணி
53.கால கர்ணிகா யட்ஷணி
54.நட யட்ஷணி
55.சண்டவேகா யட்ஷணி
56.வெறிக்கல் யட்ஷணி
57.மஹாபயா யட்ஷணி
58.ரக்த கம்பளா யட்ஷணி
59.ஷோபனா யட்ஷணி
60.புத்ரதா யட்ஷணி
61.ஸர்வ வித்யா யட்ஷணி
62.வாஷா சித்தி யட்ஷணி
63.வித்யா தாத்ரீ யட்ஷணி
64.புத்ரதா ஆம்ர யட்ஷணி
65.வித்யா தாத்ரீ உதும்பர யட்ஷணி
66.வித்யா தாத்ரீ நிர்க்குண்டீ யட்ஷணி
67.அபாமார்க்ய யட்ஷணி
68.க்ஷீரார்ணவா யட்ஷணி
69.ஸ்வாமீச்வரீ யட்ஷணி
70.வித்யா யட்ஷணி
71. கர்ண யட்ஷணி
72.மகேந்திரி யட்ஷணி
73.காந்தா யட்ஷணி
74.சங்கினி யட்ஷணி
75.சந்திரி யட்ஷணி
76.சொர்ண யட்ஷணி
77.மேகலா யட்ஷணி
78.விகலா யட்ஷணி
79.மாலினி யட்ஷணி
80.சதபத்திரிகா யட்ஷணி
81.சுலோச்சனா யட்ஷணி
82.சோபா யட்ஷணி
83.கபாலினி யட்ஷணி
84.வரயட்சினி யட்ஷணி
85.மனோரமா யட்ஷணி
86.பிரமோதா யட்ஷணி
87.சங்க பாலா யட்ஷணி
88.நாகேசி யட்ஷணி
90.பாமினி யட்ஷணி
91.வசீகரண யட்ஷணி
92. யானைமுக யட்ஷணி
93. வல்லாள யட்ஷணி
94.ருத்ர யட்ஷணி
95.வன யட்ஷணி
96.நாக யட்ஷணி
97. பாதாள யட்ஷணி
98.குஹ்ய யட்ஷணி
99.கருத்த யட்ஷணி
100.காடிகல் யட்ஷணி
101.சிங்கதல் யட்ஷணி
102.வங்கி யட்ஷணி
103.வாதுகல் யட்ஷணி
104.அஸ்வமுக யட்ஷணி
105.பிரம்ம யட்ஷணி
106.உள்ளால யட்ஷணி
107.சுந்தர யட்ஷணி
108.மாமுக யட்ஷணி



# நெருப்பாகவும் மாணிக்கமாகவும் தங்கமாகவும் ஜொலித்த திருவண்ணாமலை



பஞ்ச பூத தலங்களில் திருவண்ணாமலை அக்னி தலமாக விளங்குகிறது. மேலும் கார்த்திகை தீபத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த தலமாகவும் திருவண்ணாமலை விளங்குகிறது. படைக்கும் பிரம்மாவும், காக்கும் விஷ்ணுவும் யார் உயர்ந்தவர் என்று சண்டையிட்டுக் கொண்டனர்.

இந்த சண்டையை முடிவுக்கு கொண்டுவர சிவபெருமான் இருவரையும் அழைத்து தனது அடியையோ அல்லது முடியையோ காண்பவரே சிறந்தவர் எனக் கூறி ஜோதியாக மாறி ஓங்கி உயர்ந்து நின்றார். விஷ்ணு வராக அவதாரம் எடுத்து பூமியைக் குடைந்து அடியைக் காண முயற்சி செய்தார். பிரம்மா அன்னப் பறவையாக மாறி முடியைக் காண பறந்தார். இருவராலும் அடியையும் முடியையும் காணஇயலவில்லை.

பிரம்மா ஒரு தாழம்பூவை அழைத்து தான் முடியைக்கண்டுவிட்டதாக பொய் சாட்சி கூறச் சொன்னார். அதுவும் அப்படியே செய்தது. இதனால் கோபமடைந்த சிவபெருமான் பிரம் மாவுக்கென்று இந்த உலகத்தில் தனியே கோவில் வைக்கக்கூடாது என்றும், தாழம்பூவை பூஜைக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் சபித்தார்.

சிவபெருமான் பிரம்மாவுக்கும், விஷ்ணு வுக்கும் ஜோதியாக காட்சியளித்த இடமே திருவண்ணாமலை ஆகும். இங்கு காணப்படும் மலையான அண்ணாமலை க்ருதாயுகத்தில் நெருப்பாகவும். த்ரேதாயுகத்தில் மாணிக்கமாகவும், த்வப்ரயுகத்தில் தங்கமாக இருந்ததாகவும் சொல்லப்படுவதுண்டு. தற்போது கலியுகத்தில் கல்லாக உள்ளது. பிரம்மாவிற்கும், விஷ்ணுவுக்கும் சிவலிங்கமாக காட்சியளித்த இடத்தில்தான் தற்போதுஅருணாச்சலேஸ்வரர் கோவில் உள்ளது.

அண்ணா என்றால் 'நெருங்கவே முடியாது' என்று அர்த்தம். பிரம்மனாலும் விஷ்ணுவாலும் அடியையும் முடியையும் நெருங்கமுடியாத நெருப்பு மலை என்பதால் அண்ணாமலை என்ற பெயர் வந்தது.

ஒருமுறை பார்வதி திருக்கைலாயத்தில் சிவனின் கண்களை விளையாட்டாக மூடியதால் உலகம் இருளில் மூழ்கியது. இந்த தவற்றிற்காக காஞ்சிபுரத்தில் மண்ணால் லிங்கம் செய்து வழிபட்டார் பார்வதி. அச்சமயத்தில் சிவபெருமான் தோன்றி அவரை திருவண்ணாமலைக்குச் சென்று வழிபடும்படி பணித்தார். அங்குபவளக் குன்றில் கௌதம முனிவரின் உதவியோடு பார்வதி மேற்கொண்ட தவத்தை மஹிசாசுரன் என்னும் அரக்கன் தடுத்தான். இதனால் கோபமுற்ற பார்வதி துர்கை வடிவம் கொண்டு அவனைஅழித்தாள். பின்னர் சிவபெருமான ஜோதி வடிவில் பார்வதிக்கு காட்சி தந்து பார்வதிக்கு தன் உடம்பின் இடப்பக்கத்தை தந்து அர்த்தநாரியாக மாறினார் என்றும் கூறப்படுவதுண்டு.

மொத்தம் 24 ஏக்கர் பரப்பளவில் அமைந் துள்ள இந்தக் கோவில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்கலாம் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இக்கோவிலில் உள்ள ஆயிரம்கால் மண்டபத்தையும், சிவகங்கை குளத்தையும் கிருஷ்ணதேவராயரும், கிளி கோபுரத்தை கி.பி 1053ஆம் ஆண்டு ராஜேந்திர சோழ னும், பிரம்ம தீர்த்தத்தை கி.பி 1230ஆம் ஆண்டு வேணு தாயனும், வள்ளால கோபுரத்தை கி.பி 1320ஆம் ஆண்டு வள்ளால மஹாராஜாவும் கட்டியுள்ளனர்.

மேலும் இக்கோவில் உருவாக குலோத்துங்கன், ராஜேந்திரசோழன்,கோப்பெரும்சிங்கன், ஆதித்ய சோழன், மங்கையர்க்கரசி, விக்கிரமபாண்டியன், அம்மானை அம்மாள் ஆகியோரும் காரணமாக இருந்துள்ளனர். சேர, சோழ, பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட பெருமைக்குரியது இந்த திரு வண்ணாமலை.

பின்னர் 19 மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் இக் கோவில் புதுப்பிக்கப்பட்டு 1903, 1944, 1976, 2002 ஆகிய ஆண்டுகளில் கும்பாபி ஷேகமும் நடைபெற்றது.

பெரிய மலைக்கு நடுவே மொத்தம் ஆறு பிரகாரங்களும், ஒன்பது கோபுரங்களுடனும் பிரமாண்டமாய் காட்சியளிக்கிறது இந்தக்கோவில். கோவிலின் உள்ளே நுழைவதற்கு நான்கு கோபுரங்களும், கோவிலின் உள்ளே ஐந்து கோபுரங்களும் உள்ளன. கோவிலின் பிரதான கோபுரமான கிழக்கு கோபுரம் 217 அடி உயரமும் 11 அடுக்குகளையும் கொண்டது.

**கிரிவலம்:** இங்கு உள்ள 2668 அடி உயர மலை லிங்கம் போல் காட்சிதருகிறது. மலை யின் கீழ்த்திசையில் இருந்து பார்த்தால் ஒன்றாகவும், சுற்றும் வழியில் இரண்டாகவும், மேற்கு திசையில் மூன்றாகவும்,முடிவில் ஐந்து முகங்களாகவும் காட்சி தருகிறது இந்த மலை. இப்படி சிறப்பு வாய்ந்த இம் மலை பௌர்ணமி நாட்களில் நிலவின் ஒளி மலையில் இருக்கும் மூலிகைச் செடிகள்மீது பட்டு பிரதிபலிக்கும். அப்படி பிரதிபலிக்கும் ஒளிக் கதிர்கள் நம் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை பயக்கும். எனவே பௌர்ணமி நாளில் கிரிவலம் வருவது சிறப்பு.

14 கி.மீ நீளமுடைய கிரிவலப் பாதையில் இந்திர லிங்கம், அக்னி லிங்கம், யம லிங்கம், நிருத்தி லிங்கம், வருண லிங்கம், வாயுலிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் ஆகிய எட்டு லிங்கங்கள்எட்டுத் திசைகளிலும் உள்ளன. மாணிக்கவாசகரை சிறப்பிக்கும் வகையில் கிரிவலப் பாதையில் அடி அண்ணாமலையில் ஒரு கோவிலையும் காணலாம்.

**சிறப்புகள்:** காசியில் இறந்தால் முக்தி, திருவாரூரில் பிறந்தால் முக்தி, சிதம்பரத்தில் வழிபட்டால் முக்தி ஆனால் திருவண்ணாமலை நினைத்தாலே முக்தி தரும் தலம் என்று கூறப்படுகிறது.

அருணகிரிநாதர் பிறந்து வளர்ந்த இடம் திருவண்ணாமலை. அவர் தற்கொலை செய்ய முயன்றபோது முருகனே நேரில் வந்து காட்சியளித்து அவரை திருப்புகழ் பாடச்சொன்ன தலம் இந்த திருவண்ணாமலை. மேலும் ரமண மகரிஷி, சேஷாத்திரி சுவாமிகள் போன்றோரும் இடைக்காட்டு சித்தர் போன்ற சித்தர்களும் வாழ்ந்த இடம். அப்பர், ஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். மாணிக்கவாசகர் இங்கு இருந்து திருவெம்பாவையையும், திருஅம்மானையையும் இயற்றினார் என்று சொல்வர்.

மூன்றாம் பிரகாரத்தில் உள்ள ஸ்தல விருட்சமான மகிழ மரத்தின் கீழ் இருந்து பார்த்தால் கோவிலின் அனைத்து கோபுரங் களையும்காணலாம்.

அனைத்து கோவில்களைப் போல் தினமும் ஆறு கால பூஜைகள் இங்கும் நடைபெறுவதுண்டு. சித்திரை மாதம் வசந்த உற்சவம், ஆனி மாதம் பிரமோத்சவம், ஆடி பூரம், நவராத்திரி, தை மாதம் உத்திராயன புன்னிய கால பிரமோத்சவம், திருவூடல் திருவிழா,மாசி மாதம் மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம் போன்ற விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன.

சிவன் பிரம்மாவிற்கும், விஷ்ணுவுக்கும் பார்வதிக்கும் ஜோதியாக காட்சியளித்ததை கொண்டாடும் வகையில் கார்த்திகை மாதம் பத்து நாட்கள் கார்த்திகை தீப உற்சவமும் நடைபெறும்.





www.aanmeegamalar.com

# இப்படியும் சித்தர்கள் இருப்பார்கள்

காற்று இந்த இடத்தில் தான் இருக்க வேண்டுமென்று யாரும் கட்டளை போட முடியாது. அதே போல சித்தர்களை இங்கு இருப்பார்கள், இங்கு இருக்கமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. எங்கு வேண்டுமென்றாலும் இருப்பார்கள். எப்போதாவது ஒரு முறை தான் அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தை மற்றவர்களுக்கு அடையாளம் காட்டுவார்கள்.

பல நேரங்களில் அவர்களை இவர் சித்தராக யிருப்பாரோ என்று சந்தேகப்பட முடியாத அளவிற்கு மிக கீழ்தரமான இடத்தில் கூட இருப்பார்கள். பைத்தியகாரர்கள் போலவும், பிச்சைகாரர்கள் போல மட்டுமல்ல திருடர்கள் போலவும் இருப்பார்கள். ஒரு முறை திருக்கோவிலூர் ரயில் நிலையத்தில் அப்படி ஒருவரை சந்தித்தேன்.

எனக்கு பக்கத்தில் போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் முரட்டு ஆசாமி வந்து அமர்ந்தார். அவரிடமிருந்து வந்த சாராய நெடி குடலை புரட்டியது. அந்த நாற்றம் வேறு போதாது என்று சுருட்டு புகையை ஊதி தள்ளி கொண்டிருந்தார். அவரை பார்ப்பதற்கே அருவெறுப்பாக இருந்தது. பக்கத்தில் இருப்பவர்களின் சங்கடத்தை உணராத இங்கிதம் தெரியாத மனிதர்களை வேறு எப்படி பார்க்க முடியும்.

என் கண்ணெதிரிலேயே வேறு ஒரு அட்டூழியம் செய்தார். ரயில் நிலையத்தில் ஆள் ஆரவமில்லாத நேரம் இது. உடனடியான ரயில்வரத்து எதுவும் இல்லை. ரயில்வே ஊழியர்களின் நடமாட்டம் கூட இல்லை. மனித சஞ்சாரம் இல்லாத இடத்தில் அவரும் நானும் அடுத்த ரயிலுக்காக காத்து இருக்கும் ஒரு இளைஞரும் மட்டுமே இருந்தோம்.

மற்றபடி நான்கு காக்கைகள், தண்டவாளத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தன. அந்த சாராய மனிதர் யாருமே எதிர்பாராத ஒரு காரியத்தை செய்தார். மறைத்து வைத்திருந்த பேனா கத்தியை எடுத்து பக்கத்தில் இருந்த இளைஞன் முன்னால் நீட்டி பணத்தை எடு என மிரட்டினார்.




அப்படி ஒரு சம்பவம் என்னருகில் நிகழும் என்று கனவிலும் நினைத்து பார்க்கவில்லை. உடல் எல்லாம் வியர்த்து நாக்கு ஒட்டிக் கொண் டது.

பயத்தில் கத்த கூட முடியவில்லை. அந்த இளைஞன் நிலையோ மிகவும் பரிதாபகரமாக இருந்தது. கைகள் நடுங்க சட்டைபையில் இருந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் நீட்டிய அவன் அவர் பணத்தை பார்க்கும் அவகாசத்தில் நோட்டை கீழே போட்டுவிட்டு எழுந்து ஓடினான்.

ரயில்வே நிலைய ஊழியர்களை அழைத்து வரதான் ஓடினான். ஆனால் அதற்குள் அந்த சாராய மனிதர் ஒரு விந்தை காரியம் செய்தார்.

பணத்தை தரையில் போட்டு யாரோ எதிரியை மிதிப்பது போல் மிதித்தார். எனக்கோ பயம் அதிகரித்து விட்டது. இவன் குடிகாரன், திருடன் மட்டுமில்ல பைத்தியகாரனும் கூட தனது மூடு மாறி நம்மிடம் வந்து எதாவது வம்பு செய்தால் எப்படி சமாளிப்பது, கத்தி யாரையாவது கூப்பிட வேண்டியதுதான்

என்று வாய் திறந்த போது வாயை மூடு உன்னை எதுவும் செய்ய மாட்டேன். என்று சொன்ன அவர் தண்டவாளத்தில் இறங்கி நடக்க ஆரம்பித்தார். நம்பினால் நம்புங்கள் சற்று தொலைவு நடந்த அவர் என் கண்ணெதிரே காற்றில் கரைந்து மறைந்து போனார்.

அதற்குள் ரயில் ஊழியர்களுடன் வந்த அந்த இளைஞர் அவன் எங்கே என்று என்னிடம் கேட்டார். திகைப்பின் உச்சியிலிருந்த எனக்கு பேச்சு வரவில்லை. அவர் போன திசையை சைகையால் காட்டினேன். அதற்குள்ளே கீழே மிதிப்பட்டு கிடந்த நூறு ரூபாய் நோட்டை கண்டெடுத்த ரயில்வே ஊழியர் அவன் பைத்தியகாரன் போல் இருக்கிறது. ஓடிவிட்டான் விட்டுவிடுங்கள் என சொன்னார். இந்த சம்பவம் ஏன் நடந்தது என்று இன்று வரை விளங்கவில்லை என்றாலும் திருடர்களாகவும் சித்தர்கள் வருவார்கள் என்பது புரிந்தது.





**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு
கொள்ளவும்
போன்:
**09442426434**

# சிவனின் திருமுடியை கண்ட பிரம்மன்





கார்த்திகை மாதம் என்றாலே விரத மாதமாக அனுசரிக்கப்படுகிறது, அந்த மாதத்தில் ஒருசில கோவில்களுக்கு சென்று வழிபட்டால் மிகுந்த பலன் கிடைக்கும். அந்த வகையில் கார்த்திகை மாதம் அவசியம் சென்று தரிசிக்க வேண்டிய தலம் ஒன்று உள்ளது. அதைப் பற்றி விரிவாக பார்ப்போம்...

அடிக்கடி விபத்துகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா, திருவிரிஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் கோவிலுக்கு சென்று வழிபட்டு வாருங்கள், விபத்து சம்பந்தமான பிரச்சனைகள் முடிவுக்கு வந்துவிடும்.

ஜாதகத்தில் வாகன விபத்து கண்டங்கள் உள்ளவர்கள் இத்தலத்து இறைவனை வணங்கி வழிபடின் விபத்து கண்டங்களிலிருந்து இறைவனால் காக்கப்படுவர் என்பது திண்ணம்.

வேலூர் மாவட்டத்தில் பாலாற்றங் கரையில் அமைந்த சிவத்தலம் விரிஞ்சிபுரம். இது ஷீரமாநதி (ஷீரம் என்பதற்கு வடமொழியில் பால் என்று பொருள்) என்றழைக்கப்படும் பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. சுமார் 1000 ஆண்டுகள் பழமையானது. இதன் புராணப்பெயர்கள் திருவிரிஞ்சிபுரம், கரபுரம்.



வேலூர் மேற்கே சுமார் 12 கி.மீ தொலைவில் சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ளது. இத்திருக்கோவில், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 1 கி.மீ வடக்கில் அமைந்துள்ளது. அருகிலேயே பாலாறு அமைந்துள்ளது. தேவாரப்பாடல் பெற்ற தலம் என்ற சிறப்பினை உடையது.

இத்தலம் மிக்க பழமையான ஒன்று. அடி முடி காணும் போட்டியில் பொய் கூறிய பிரம்மாவின் தலை கொய்யப் பட்டவுடன் அவர் இறைவியை வேண்ட, இறைவி இத்தலத்து இறைவனை நோக்கி தவமியற்ற பிரம்மனுக்கு அறிவுரை வழங்கினார்.

பிரம்மனும் இறைவனை நோக்கி தவமியற்ற பிரம்மனின் சாபம் போக்க பிரம்மனை மனிதனாய் பிறக்க வைக்கிறார் இறைவன். பிரம்மன், சிவசர்மன் என்ற பெயரில் மனிதனாய் பிறக்க தக்க தருணத்தில் வந்து இறைவனே பிரம்மனுக்கு உபதேசம் செய்து ஆட்கொண்டார்.

## பிரம்ம உபதேச தலம்:

சிவசர்மன் சிறுவனாக இருந்ததால் லிங்கத்திற்கு (லிங்கம் உயரமாக இருந்ததால்) நீருற்ற முடியவில்லை. சிவசர்மனாக பிறந்த பிரம்மன் தன் ஊழ்வினை தவற்றை உணர்ந்து, இறைவனிடம் முடியை காண இயலவில்லை என்று வேண்ட அவரும் தனது முடியை சாய்ந்து கொடுக்கிறார்.

அண்ணாமலையில் இறைவனின் முடியை காணாத பிரம்மா இத் தலத்தில் தான் இறைவனின் முடியை கண்டார். லிங்கம் சுயம்பு லிங்கமாக சற்று முன்னோக்கி சாய்ந்துள்ளது. பிரம்மா உபதேசம் பெற்ற தலம்.

## தல பெருமைகள்:

இத்தலத்து இறைவனை வணங்கிடில் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குவர் என்பது திண்ணம். இத்தலத்து இறைவன் சிவசர்மனாகிய பிரம்மனுக்கு உபநயனம் செய்வித்து ஒரு முகூர்த்த காலத்தில் 4 வேதங்கள், 6 சாஸ்த்திரங்கள், 18 புராணங்கள் மற்றும் 64 கலைகளையும் போதித்து ஆட்கொண்டவர்.

பிரம்மனுக்கு சிவபெருமானே சிவ தீட்சை அளித்த தலம் என்ற சிறப்புடையது இத்தலம். இதனால் சிவபக்தர்கள் பெரும்பாலானோர் இத்தலத்திற்கு வந்து சிவ தீட்சையை பெறுகின்றனர். இத்தலத்தில் தீட்சை பெற்றால் அதை விட பெரிய பேறு இவ்வுலகில் இல்லை.

இத்தலத்து இறைவன் அறிவின் சிகரம். இத்தலத்து இறைவன் பிரம்மனுக்கு போதித்து வழிகாட்டியதால் மார்க்க சகாயர் என்றழைக்கப்படுகிறார். இத்தலத்து இறைவன் மிளகு வணிகருக்கு வழித் துணையாக சென்றதால் வழித் துணை வந்த நாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

மைசூர் நகர வணிகர் ஒருவர் காஞ்சி மாநகர் சென்று மிளகு விற்பது வழக்கம். அவ்வாறு விற்க செல்லும் வேளையில் இத்தலத்தில் அந்த வணிகர் இரவு தங்க நேரிட்டது. இத்தலத்து

இறைவனை வழித் துணையாக வரும் படி வேண்ட, இறைவனும் வேடன் வடி வில் வணிகரை பின் தொடர்ந்து சென்று திருடர் களிடமிருந்து காத்தார்.

அதற்கு காணிக்கையாக மூன்று மிளகு பொதிகளை விற்ற பணத்தை காணிக்கையாக செலுத்தினார் அந்த வணிகர். வணிகரின் கனவில் இறைவன் தனது திருவிளையாட்டை எடுத்துரைக்க இறைவனின் அருளில் நெகிழ்ந் தார் வணிகர்.

இப்போதும் அதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் "பார் வேட்டை" என்ற பெயரில் கோவிலில் இச்சம்பவத்தை நடித்துக் காட்டுவர். எனவே தான் இத்தலத்து இறைவனுக்கு மார்க்க பந்தீஸ்வரர் என்ற பெயரும், வழித்துணை வந்த நாதர் என்ற பெயரும் ஏற்பட்டது.

## அழகிய தோற்றம் :

இத்தலத்து வடக்கு பக்க கோபுர வாயில் எப்போதும் திறந்தே இருக்கும். இதன்வழியாக தேவர்கள் தினமும் இறைவனை வழிபடுவதாக செய்தி. திருவாரூர் தேரழகு. திருவிரிஞ்ச மதில ழகு. கோவிலின் மதில் சுவர்கள் உயரமானவை, அழகானவை. இத்தலத்தில் மூன்று பைரவர்கள் அருள் பாலிக் கின்றனர். இத்தலத்து கோவிலில் அழகிய சிற்ப வேலைப் பாடுகள் அமைந்த மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## தல மரம்:

இக்கோவிலில் 108 லிங்கங்கள் ஒரே லிங்கத்திலும், 1008 லிங்கங்கள் ஒரே லிங்கத் திலும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றை வழிபடின் ஒரே நேரத்தில் 108 மற்றும் 1008 லிங்கங்களை வழிபட்ட புண்ணியம் கிடைக்கும். இத்தலத்தின் மரம் பனை மரம்.

இம்மரம் ஒரு ஆண்டில் வெண்மையான காய்களையும், மறு ஆண்டில் கருமையான காய் களையும் காய்ப்பது தனி சிறப்பு. தொண்டை மண்டத்தில் பனை மரம் தல விருட்சமாக இருக் கும் தலங்கள் இரண்டு. அதில் ஒன்று விரிஞ் சிபுரம்.

மற்றொன்று திருவண்ணாமலை மாவட் டத்தில் அமைந்திருக்கும் செய்யாறு என்ற ழைக்கப்படும் திருவத்திபுரம். பண்டைக்காலத் தில் இத்தலமானது 'நைமி சாரண்யம்' என்றழைக்கப்பட்ட முனிவர்கள் கூடும் புண்ணி யத்தலமாக விளங்கியது.

இறைவன் இறைவியிடம், அம்பிகைகறுப்பு நிறமாய் இருப்பதால் 'ஹே சங்கரீ' என விளை யாட்டாக அழைக்க இதனால் கோபமுற்ற இறைவி பாலாற்றின் வடகரையில் பொற்பனங்காட்டினுள் ஐந்து வேள்விக் குண்டங்களை அமைத்து அதன் நடுவே ஒற்றைக்காலில் நின்று தவமிருந்தாள்.

அத்தவத்தின் முடிவில் சிம்மகுளத்தில் நீராடி தனது கருமை நிறம் நீங்கி பொன்னிறம் கொண்ட மரகத வல்லியாக இறைவனின் இடப் பாகத்தில் இடம் கொண்டாள். இதனால் தான் இத்தலத்து மரம் பனை மரமாக உள்ளது.

பிரம்மன் சாப விமோசனம் பெற்ற நாள் கார்த்திகை மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமை. ஒவ்வொரு ஆண்டும் அதே நன்னாள் இரவில் பெண்கள் அம்பிகை, பிரம்மன் ஆகியோர் நீராடிய சிம்ம குளத்தில் நீராடி ஈர ஆடையுடன் கோவில் மண்டபத்தில் படுத்து உறங்குவர்.

நீராடி ஈர ஆடையுடன் உறங்கும் பெண்க ளுக்கு எவ்வித குளிரும் தாக்குவது இல்லை என்பது கண்கூடு. இறைவன் இவ்வாறு நீராடிய பெண்களின் கனவில் வந்து பூக்கள், பழங்கள், புத்தாடைகள் ஆகியவற்றினைத் தாங்கியபடி முதியவர் கனவில் காட்சி தந்தால் அப்பெண்கள் விரைவில் கருத்தரிக்கும் பாக்கியத்தினை அடைவர் என்பது திண்ணம்.

இத்தலத்தின் தீர்த்தம் சிம்ம தீரத்தம் ஆகும். இதில் ஆதிசங்கரர் பீஜாட்சர யந்திரத்தினை அமைத்துள்ளார். இதில் நீராடினால் நீராடு பவர்களை பற்றிய தீய சக்திகள் விலகும் என்பது திண்ணம் !!!

விரிஞ்சிபுர சிற்பக் கலை சிறப்புக்கு ஒரு சான்றாகவும் விளங்குகிறது. இங்கு விசேஷமான தீர்த்த கட்டங்கள் உள்ளன. பிரம்ம தீர்த்தம் ஆலயத்திற்கு வெளிப் பிராகாரத்தில் பெரிய தடாகமாக அமைந்துள்ளது.

இந்த சிம்ம தீர்த்தம் பெரும் மகிமை வாய்ந்தது. இதற்கு கௌரீ தீர்த்தம் என்றும் பெயர். இது விரிஞ்சி புரத்திற்குத் தனிச்சிறப்பைஅளிப்பது இது ஆலயத்தில் முதல் பிராகாரத்தில் தென் கிழக்கே உள்ளது.

ஒருசிங்கத்தின் வாய் வழியாக நுழைந்து செல்லும் முறையில் நடபாவிக் கிணறாக அமைந்துள்ளது.

குழந்தைகள் இல்லாதவர்கள் சிம்ம தீர்த்தத்தில் நீராடி, ஈர உடையுடன் ஆலயத்தில் படுத்துறங்கி பகவானின் அனுக்ரஹத்தைப் பெற்றால், அடுத்த வருடமே அவர்களுக்குத் குழந்தை பிறக்கும். இந்த உண்மையை இந்தத் தலத்தின் பல பெரியவர்களும், பயன் பெற்றவர்களும் தெரிவிக்கிறார்கள்.

சூலி தீர்த்தம், சோம தீர்த்தம் ஆகியவையும் உள்ளன. அவற்றில் நீராடி இறைவனை வழிபடுவோர் சகல நன்மைகளும் பெறுவார்கள்.

மேலும் ஜாதகத்தில் வாகன விபத்து கண்டங் கள் உள்ளவர்கள் இத்தலத்து இறைவனை வணங்கி வழிபடின் விபத்து கண்டங்களிலிருந்து இறைவனால் காக்கப்படுவர் என்பது திண்ணம்.

வட இந்தியர்கள் இத்தலத்தில் அதிகம் வந்து செல்கின்றனர், இத்தலத்து இறைவனின் பெருமையை உணர்ந்த வட இந்திய மக்கள் இத்தலத்தை நாடி வந்து இறைவனை வணங்கி செல்கின்றனர். அடிக்கடி வெளியூர் பயணம் செய்பவர்கள் இறைவனை வணங்கி பயணம் இனிதாக அமைய வேண்டுகின்றனர்.

மஹான் அப்பைய தீக்ஷிதர் மார்க பந்து ஸ்தோத்திரம் மார்க்க சகாய லிங்க ஸ்துதி ஆகியவற்றை வழங்கி இருக்கிறார். மார்க சகாய லிங்க ஸ்துதி பெரும் ஆற்றல் வாய்ந்தது என்பதை அனுபவமிக்கவர்கள் தெரிவிக்கிறார்கள்.










சிம்ம தீர்த்தம்

அப்பைய தீக்ஷிதர் வம்சாவழியினர் இவரை தான் குல தெய்வமாக வழிபட்டும் அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மார்கபந்து , மார்கசகாயம் என்ற பெயர்களை வைப்பது இன்றும் வழக்கமாக உள்ளது .

இந்த தல இறைவனை வழிபட்டுதான் அப்பைய தீக்ஷிதர் பல சித்திகளை பெற்றார் .

விரிஞ்சிபுரத்தில் பல விசேஷ உற்சவங்கள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றன. சித்திரா பௌர்ணமியில் வசந்த விழா, ஆனி உத்திரத்தில் ஆனித் திருமஞ்சன அபிஷேகம், பத்து தினங்கள் தேரோட்டத்துடன் ஆடிப்பூர விழா, புரட்டாசியில் நவராத்திரி கொலு, ஐப்பசியில் அன்னாபிஷேகம், பங்குனியில் பிரம்மோற்சவம் முதலியவை குறிப்பிடத்தக்கவை.

கார்த்திகை மாதத்தில் கடை ஞாயிறு பெரு விழா இந்தத் திருத்தலத்தின் தனிச் சிறப்பான உற்சவம். அன்றைய தினம் பாலக பிரம்மாவான சிவ சர்மனுக்கு இறைவன் உபநயன சிவ தீக்ஷ அருளிய விழா வெகு விமரிசையாக கொண்டாடப்படும்.

## போக்குவரத்து வசதி:

இரயில் மூலம் வருபவர்கள் காட்பாடி சந்திப்பிலிருந்து இறங்கி புதிய பேருந்து நிலையம் வந்து பின்பு சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் செதுவாலை என்ற இடத்தில் இறங்கி 1 கி.மீ வடக்காக சென்றால் இத்தலத்தை அடையலாம்.

பேருந்து மூலம் வருபவர்கள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஆம்பூர் வழியாக செல்லும் பேருந்துகளில் பயணம் செய்து சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ் சாலையில் செதுவாலை என்ற இடத்தில் இறங்கி 1 கி.மீ வடக்காக சென்றால் இத்தலத்தை அடையலாம்.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து நகர பேருந்துகள் இத்தலத்திற்கு நேரடியாக இயக்கப்படுகின்றன.



ஆன்மிகமலர் மெயில் புக்



மாதம் தோறும் இரண்டு இதழ்களாக (இ-புக் வடிவில்) வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும் இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள் படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

# இறைவனின் இருப்பை இயற்கை திரையிடுகிறது

71
பாகம்
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
மனித வாழ்வு மேம்படுவதற்காக

பரமஹம்ஸர் கூறுகிறார்: “மனிதனுக்குச் சபலம் ஏன் கொடுக்கக்கூடாது? எந்த லௌகீக சபலத்தையும்விட அதிக சபலமூட்டும் அந்த ஒருவனை அவன் தேட வேண்டும் என்பதற்காகவே உங்களைச் சூழ்ந்துள்ள பூவுலகக் கவர்ச்சிகள் உங்களைப் பொறியில் சிக்கவைக்கும் நோக்கத்திற்காக அல்ல, ஆனால் அவற்றையும் கடந்து தேட உங்களைத் தூண்டுவதற்காகவே, உங்களை, “இந்தப் பொருட்களையெல்லாம் படைத்தது யார்? என்னைப் படைத்தது யார்? நான் யார்? இறைவா, நீ எங்கே இருக்கிறாய்? நீ ஏன் மறைந்திருக்கிறாய்? என்னுடன் பேசு” எனக் கேட்கச் செய்வதற்காகவே. நீங்கள் இந்த வினாக்களுடன் இறைவனை நேரடியாக அணுகும்போது அவன் பதிலளிக்கிறான்.

அனேகர் அவனை தேவையான அளவு ஆழ்ந்து அழைப்பதில்லை. எனவே, அவர்கள் அவனை ஒருபோதும் காண்பதில்லை. உங்க ளுடைய ஆன்ம மொழியில் அவனுடன் தெளிவாக நீங்கள் பேச வேண்டும். “இறைவா நீ படைத்திருக்கும் இந்த அழகை மட்டுமே இனிமேலும் தொடர்ந்து காண்பதற்கு நான் விரும்பவில்லை. நான் மலர்களைவிட அதிக அழகான மற்ற முகங்களையும்விட அதிகப் பரவசப்படுத்தும் உன் திரு முகத்தைக் காணவே விழைகின்றேன்.

அனைத்து இயற்கைக்கும் பின்னால் யார்உள்ளார் என்பதைக் காண விழைக்கின்றேன்.” ஒரு மனிதன் தன்னைத் திரையிட்டு மறைத்துக் கொண் டாலும்கூட அங்கே எவரோ இருப்பதை நீங்கள் காண முடியும். இது போலவே இயற்கை, இறைவனின் இருப்பால் புடைத்துள்ள ஒரு பெரும் திரை போன்றுள்ளது. அவன் அங்கே மறைந்திருக்கிறான். ஆனால் கூச்சமுள்ள இந்த அக இருப்பிட வாசியைக் காண, ஊடுருவி நோக்காமல், நீங்கள் வெறும் ஒரு சாதாரண பார்வையை வீசுகிறீர்கள்.

நான் சுவாசமின்றி மௌனமாக தியானத்தில் விழிப்புடன் அமர்ந்திருக்கும்போது, ஓர் ஆனந்தமயமான துடிக்கும் அதிர்வை எனக்குள் உணர்கிறேன். அத்துடன் அவன் கிசுகிசுக்கிறான். “நான் இங்கே உள்ளேன்.”

“இறைவன் நமக்குக் கொடுத்துள்ள அறிவாற்றல்தான் சுவர்க்கத்திற்கான வாயில். அவனுடைய ராஜ்யத்திற்கு அதுதான் வெளிப்புறக் கதவு. ஆனால் நீங்கள் அதைப் பயன்படுத்துவதில்லை. ஏன் அதை இப்பொழுதே, இன்றே பயன்படுத்தக்கூடாது? மரணத்தால் உதைக்கப்பட்டு, ஒரு நாயைப்போன்று இவ்வுலகத்தை விட்டுச் செல்வதற்காக மட்டுமே காத்திருக்காதீர்கள். அது உங்கள் ஆன்மாவிற்கு எதிரான குற்றமாகும்.

உங்களுடைய அறிவாற்றல், நீங்கள் ஏன் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறீர்கள் என்பதைக் கண்டறிவதற்காக உங்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதாவது அவனைக் காண்பதற்காக.”

இறைவனை அனுபவிக்க ஆன்ம அனுபூதி அவசியம்.



குருதேவர் அருளுகிறார்: “விஞ்ஞான அறிவு உண்மைகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்டுள்ளது. மருத்துவத்துறை இன்னும் குறிப்பிட்டவியாதிகளுக்கு காரணங்களும்நிவாரணங்களும் இனிமேல்தான் கண்டுபிடிக்கப் படவேண்டுமென்றாலும், மிக நன்றாகவே பெருமளவில் வளர்ந்துள்ளது.

ஆனால் விஞ்ஞானம் எதை அறிந்திருக்கிறதோ அல்லது எவையல்லாம் பற்றி அது கிட்டத்தட்ட நிச்சயமாக இருக்கிறதோ என்றால், அவற்றைப்பற்றிய காரணிகள் எல்லாம் சோதிக்கப்பட்டவையால்தான்:

கோட்பாடுகள் சோதிக்கப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. மக்களுக்குக் குறிப்பிட்ட செய்திகள் அல்லது உண்மைகள் அளிக்கப்பட்டு அவற்றை நம்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சிறிதுகாலம் கழித்துஅவர்களது நம்பிக்கைநிறைவேறப் படவில்லையென்றால், ஐயம் மெதுவாக உள்ளே நுழைகிறது.”

“இறைவனை உணர ஒரு திட்டவட்டமான வழி உள்ளது. அது என்ன வழி? அது சமய உண்மைகளுடன் விஞ்ஞான ரீதியான பரிசோதனை. நீங்கள் நம்புவதைப் பயிற்சி செய்துபாருங்கள்! மதத்தை பயிற்சிக்கு உள்ளாக்கி அதை

ஒரு விஞ்ஞானமாக உங்கள்மீது பரிசோதனை செய்து நிரூபிக்கப் பயன்படுத்துதல் சாத்தியமே. சத்தியத்திற்கான தேடல்தான் உலகத்திலேயே மிக அற்புதமான தேடலாகும். வெறுமனே ஞாயிற்றுக்கிழமை சமயக்கூட்டத்தில் கலந்து கொண்டோ அல்லது ஒரு பூஜையை செய்து கொண்டோ இருப்பதற்குப் பதிலாக மதமானது ஒரு நடைமுறைத் தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். சமய லட்சியங்களையொட்டி எவ் வாறு உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பதைப் பயிலுங்கள். நடைமுறைப்பயன்பாடு இல்லாமல், மதத்திற்கு எந்த மதிப்பும்இல்லை.”

மேலும் அவர் தன்னுடைய ஓர் அனுபவத் தைக் கூறுகிறார்: “இந்த இடத்திற்கு (என்ஸினி டனுக்கு) அருகில் ஒரு பெரிய பண்ணைக்குச் சொந்தக்காராயிருந்த ஒரு மனிதன் மிகவும் லோகாயதவாதியாக இருந்தார். நான் அவரை அவ்வப்போது என்ஸினிடனுக்கு வருமாறு தூண்டினேன். அவரும் அவ்வாறே செய்தார். முதல் சில வருகைகளுக்குப் பிறகு அவர், கண்களில் கண்ணீர் தளும்பக் கூறினார், “நான், இறைவனின் இருப்பை இந்த அளவிற்கு வெறும் சூழ்நிலைகூட பேசக்கூடிய ஓர் இடம் இருக்கிறது என்பதை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.” பார்த்தீர்களா, மதம் நடை முறைக்கேற்றதாக இருக்க வேண்டும். அது உங்களுக்குள் உங்கள் உணர்வு நிலையில் மற்றும் உங்கள் நடத்தையில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.

இங்கு முறை தவறாது வழக்கமாக வருப வர்கள் தங்களது வாழ்க்கைமுறையை உயர்ந்த விதத்தில் மாற்றிக் கொண்டுள்ளனர். இந் தச் சூழ்நிலையில் அவர்கள் ஆன்மீகமாக தாக்க மடைந்துகொண்டிருக்கின்றனர்.”

“எனவே மதமானது அதை நிரூபிக் கவும் மற்றும் நடைமுறையாக்கவும் பரிசோதிக்கப் படவேண்டும். அநேக தேவாலயங்கள் பெரிய அளவில் சமூக நன்மை புரிகின்றன. ஆனால் அவை, உங்களுக்கு நீங்களே எப்படி இறைவனை நிரூபித்துக்கொள்ள முடியும் என்றும் எவ்வாறு நீங்கள் அவனுடன் ஒத்திசைந்திருப்பது என்றும் காட்டுவதில்லை.

குருதேவர் கூறியது போன்று, “இறைவா! நீ என்னை எதற்கு படைத்தாய்? நீ எங்கே இருக் கிறாய் “என்றெல்லாம் கேள்விகளை இந்தக் காலத்தில் யார் கேட்பார். தற்போதைய உலகம்



எப்படி உள்ளது. என்பது அனைவருக்கும் தெரி யும். பணத்தை எந்த வழியில் சம்பாதிக்கலாம் என்பதற்காக மட்டும் இக்கால மனிதர்கள் பிறந்து வாழ்கின்றனர் என்று தோன்றுகிறது. வேறு எந்தச் சிந்தனைக்கும் இடமில்லை. அவ் வாறிருக்கையில் யார் இறைவனைப் பற்றி நினைக்கிறார்.

என்னுடைய இளவயதில், எனக்கு ஐந்து வயதுள்ளபோதே என் தந்தை எங்களிடம் கூறுவார், மாலை 6.00 மணிக்கு சந்தியா சமயம் (அந்திநேரம்) தீபம் ஏற்றிவைத்து இறைவனின் நாமங்கள் பாட வேண்டும். நாங்கள் அதைச் செய்வோம். அது ஒரு மணிநேரம் (6.00 மணி முதல் 7.00 மணி வரை) செய்வோம். அதன் பின்னர்தான் படிப்பும், அதன் பிறகு இரவு சாப்பாடு. எங்கள் குடும்பம் கூட்டுக்குடும்பம். அதனால் எல்லாரும் உட்கார்ந்து இறைபஜன் செய்வோம். என் தந்தை, பக்தியை எப்படி வளர்க்க வேண்டும் என்றும் அது மரணகாலத்தில் உதவும் என்றும் இறைபக்தி நம் பயத்தைப் போக்கும் என்றும் கூறுவார், அதனாலேயே எங்கள் அனைவருக்கும் இறைவன்மேல் பக்தி வளர்ந்தது. அதற்கு என் தந்தைதான் காரணம். இன்று யோகதா தியானம் செய்வதற்கு என் தந்தையும் ஒரு காரணமாக இருப்பார் என்று எண்ணுகிறேன். அவ்வாறு செய்ததால் என் தந்தைக்காக நான் தினமும் கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை செய்துவருகிறேன். “ இறைவா ! என் தாய்தந்தையர் ஆத்மாக்கள் உன்னை அடைவதற்காக மேலெழச்செய்வாய்; அவர்களும் உன்னை அடைவதற்கு நீ உதவுவாய். ”

இன்றைய நாளில் சந்தியா வந்தனத்திற்குப் பதிலாக என்ன நடக்கிறது? டி.வி. திறந்து அதைப் பார்க்கின்றனர். அதனால் என்ன பயன் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இறைவனுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுத்த காலத்தில் நாடும் வீடும் நன்றாகயிருந்தன. முக்கியத்துவம் குறையக்குறைய அதர்ம்ம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

அதற் கேற்றவாறு ஐஸ்வரியமும் குறைந்து வருகிறது. இதிலிருந்து என்ன தெரிய வருகிறது என்றால் இறைவனிருக்கும் இடம்தான் நன்றாக யிருக்கும் இறைவனின் அருள் இல்லாத இடத்தில் தீமைதான் விளையும் என்பது இக்கால கட்டத்தை வைத்து தீர்மானமாகக் கூறமுடியும். குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தர் போன்று எத்தனையோ மகான்கள் அவர்கள் தன் போதனைகளின் மூலம் கூறியுள்ளனர். அன்றைய காலத்தில் மகான்களுடைய போதனைகளைக் கடைபிடித்தவர்கள் தப்பித்துக் கொண்டனர். அல்லாதோர் தீமை யால் மடித்துள்ளனர்.

“அதிகாலை, நண்பகல், மாலை, இரவு இந்த நேரங்களில் இறைவனை நினைத்து தியானம் செய்ய வேண்டும்” என்று குரு தேவர் கூறியுள்ளார். அதற்கேற்றவாறு, அவ்வாறு செய்தவர்கள் எல்லாம் நன்மை அடைந்து கொண்டிருக்கின்றனர். இவ் வாறு நாம் பூமிக்கு வந்த நோக்கம் என்ன வென்று அறிந்துணர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கை நமக்கு பயனுள்ளதாகிவிடும். முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதற்கு முக்கியத்துவம் கொடுத்துதான் வாழ வேண்டும். அப்படியென்றால் இறைவனுக்கு மட்டும் முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுத்து வாழ வேண்டும் என்பது பொருள்.

மீண்டும் மலரும்... குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்


ஆன்மிகமலர் மெயில் புக்



# கிருஷ்ணருக்கு கால் அச்சு முருகனுக்கு கை அச்சு



கார்த்திகை மாதம் என்றாலே விரதங்களுக்கு பெயர் போனது, சிவனுக்கும், ஐயப்பனுக்கும், முருகனுக்கும் மிகச் சிறந்த மாதம் கார்த்திகை, திருவண்ணாமலை ஜோதியாக சிவன் காட்சி தருவது கார்த்திகை மாதத்தில்தான், தை மாதம் ஜோதியாக ஐயப்பன் காட்சிதர உபவாச விரதம் துவக்கப்படுவது கார்த்திகை மாதத்தில்தான், பொதுவாக இந்த மாதத்தில் தமிழகம் மற்றும் கேரளா, கர்நாடகம், ஆந்திரம், தெலுங்கானா போன்ற தென் இந்திய மக்கள் ஐயப்ப விரதத்தை கடைபிடிப்பது நடைமுறையில் உள்ளது, கார்த்திகை மாதத்தில் முருக அவதாரம் நிகழ்ந்ததாக கருதப்படுவதால், முருகப் பெருமானை வளர்த்த கார்த்திகை பெண்களுக்கு இந்த மாதத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது.

இதில் ஒருபடி மேலாக முருகனின் பிறப்பை திருநெல்வேலி மாவட்டத்தைச் சுற்றியுள்ள வள்ளியூர், நாகர்கோவில் போன்ற பகுதிகளில் வாழும் மக்கள் மிக விமரிசையாக கொண்டாடுகின்றனர்.

கிருஷ்ண ஜெயந்தியன்று கிருஷ்ணரின் காலடியை, அரிசி மாவில் வீடுமுழுவதும் பதித்து, கிருஷ்ணர் வீட்டிற்குள் வாசம் செய்வதாக கொண்டாடப்படுகிறது. இது உலகெங்கிலும் கொண்டாடப்பட்டு வரும் நடைமுறையாகும்.

தென் தமிழகத்தில் உள்ள முருகன் கோவில் திருத்தலங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வள்ளியூரும் ஒன்று. திருநெல்வேலியிலிருந்து 45 கி.மீ தொலைவில் நாகர்கோவில் செல்லும் வழியில் உள்ளது.

தெற்கு கள்ளிகுளம், ஏர்வாடி, முடவன்குளம், சீலாத்திகுளம், வடக்கன்குளம், தேரை குளம், வேப்பிலாங்குளம், வண்டலம்பாடு,அச்சம்பாடு, கும்பிலம்பாடு, முத்துனாடார் குடியிருப்பு, துறை குடியிருப்பு, லெப்பகுடியுருப்பு, சமூகரெங்கபுரம், சவுந்திரபாண்டிபுரம், பணகுடி, புளியங்குடி, காவல்கிணறு ஆகிய வட்டார மக்கள் முருகப்பெருமானின் பிறப்பை சிறப்பு விழாவாக கொண்டாடுகின்றனர்.

இதில் ஒருசில பகுதி மக்கள் தங்களது வீட்டுச் சுவர் மற்றும் கதவுகளில் சிறு குழந்தையின் கை அச்சை வரைந்து, முருகப்பெருமான் வீட்டில் பிஞ்சுப் பாதத்தின் மூலம் சுவற்றை பிடித்து வலம் வருவதாக இன்றுவரை கடைபிடித்து வருகின்றனர்.

முருகப்பெருமானின் பிஞ்சுக் கைகளை சுவற்றில் பதித்து வீடு முழுவதும் நடந்து வருவதை மெய்ப்பிக்கும் வகையில் வீட்டு சுவர்கள் மற்றும் வாசல் கதவுகளில் முருகனின் கை அச்சை விதவிதமாக வரைந்து கார்த்திகை தீப திருநாளை போற்றுகின்றனர்.

இதுமட்டுமின்றி வள்ளியூர் என்ற இடத்தில் வேடுவப் பெண்ணான வள்ளியை முருகப் பெருமான் மணம் முடித்ததால் வள்ளியூர் கோவிலில் கார்த்திகை மாதத்தை மிகச் சிறப்பு விஷேசமான மாதமாக கொண்டாடுகின்றனர்.

முருகப்பெருமான் அசுரர்களை வதம் செய்த சூர சம்சம்ஹார நிகழ்ச்சி, திருச் செந்தூரில் மாலையில் நடைபெறும், ஆனால் வள்ளியூரில் மட்டும் சூர சம்சம்ஹார நிகழ்ச்சி இரவில் நடை பெறுகிறது.

திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் நிகழ்த்திய முருகன், மிஞ்சிய அசுரர்களை இரவில் வள்ளியூர் பகுதியில் வதம் செய்து, அசுரர்களுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டுவந்தார், இதனால் வள்ளியூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரவில்தான் சூரசம்ஹார நிகழ்ச்சி நடை பெறுகிறது.

மேலும் இங்கு வள்ளிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது. கார்த்திகை மாதத்தை இங்கு உள்ள மக்கள் மிகச்சிறப்பான விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

இவர்களின் வழக்கத்தை நாமும் பின்பற்றி இந்த கார்த் திகை தீபத் திருவிழா நாளில் முருகப்பெருமானின் பிஞ்சுக் கை அச்சை வீட்டு சுவர்களில் வரைந்து முருகனை வீடு முழுவதும் தவழ விடுவோம்.





# அயோத்தியா ஒரு பார்வை

அழகான சரயு நதிக்கரை, 108 ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேசங்களில் ஒன்று, ஸ்ரீ இராமர் பிறந்த புண்ணிய பூமி, அவர் சுமார் 12,000 ஆண்டுகள் ஆட்சி செய்த ஸ்தலம், சமீப கால இந்தியாவில் பல்வேறு சர்ச்சைகளை எழுப்பிய இடம் என பல்வேறு அடை மொழிகளைக் கொண்டு, உத்திர பிரதேச மாநிலத்தின் பைசாபாத் நகரிலிருந்து 7 கி.மீ தொலைவில் அமைந்துள்ள அயோத்தியா.

## இராம ஜென்ம பூமி

அயோத்தியாவிற்குச் செல்பவர்கள் அனைவரும் தவறாமல் பார்க்கக்கூடிய இடம், இராம ஜென்ம பூமி. பகவான் ஸ்ரீ இராமர் தனது லீலைகளை அரங்கேற்றுவதற்காக இவ்வுலகில் அவதரித்த இடம், தற்போது இராம ஜென்ம பூமி என்று அழைக்கப்படுகிறது. பாலகனின் உருவில் தனது சகோதரர்களுடன் வீற்றிருக்கிம் இராமரின்விக்ரஹத்துடன் தரிசிக்கும் வகையில் அமைந்துள்ளது. முறையான கோயில் ஏதுமின்றி, சிறிய குடிசை போன்ற அமைப்பில் இராமர் கருணையுடன் பக்தர்களுக்கு தரிசனம் தருகிறார். தற்போது இராமபிரானுக்கு கோயில் கட்டும் ஆயத்தப்பணிகள் நடைபெறுகின்றன. இதுவரை இராமரின் தரிசனத்தைப் பார்க்க மிகுந்த இராணுவ கட்டுப்பாடுகள், சிரமங்கள், இன்னல்கள் என அனைத்தும் இனி மெல்ல விலகும். பகவான் ஸ்ரீ இராமர் பூலோகத்தில் அவதரித்த தினம், இராம நவமி என்ற பெயரில் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

## தசரதரின் யாக கூடம்

இராம ஜென்ம பூமிக்கு அருகில் அமைந்திருப்பது தசரதரின் வேள்விக் கூடம். குழந்தை வேண்டி மாமன்னர் தசரதர் நிகழ்த்திய யாகம் இராமாயணத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

கௌசல்யா, சுமித்ரா, கைகேயி என மூன்று மனைவிகள் இருந்தும், பல வருடங்களாகியும் தனக்கு புதல்வன் பிறக்காத காரணத்தினால், அயோத்தியாவை தலைநகராகக் கொண்டு கோசல நாட்டை ஆண்டு வந்த மாமன்னர் தசரதர் புத்திர காமேஷ்டி யாகம் மேற்கொள்ளத் திட்டமிட்டார். இந்த திட்டத்தை கேள்விப்பட்ட தசரதரின் மூத்த அமைச்சரான சுமந்திரன், சிறந்த ரிஷியான ரிஷ்யசிருங்கரின் தலைமையில் ஆடம்பரமான யாகத்திற்கு ஏற்பாடு செய்தார்.

அச்சமயத்தில் தேவ லோகத்தில் இராவணனின் கொடூர செயல்களுக்கு தீர்வு வேண்டி தேவர்கள் அனைவரும் பிரம்மாவிடம் முறையிட்டனர். அங்கு தோன்றிய நாராயணர், கூடிய விரைவில் தான் தசரதரின் நான்கு மகன்களாக தோன்றி பூமியின் துயரத்தை நீக்குவேன் எனக் கூறி மறைந்தார்.

புத்திர யாகம் வெற்றிகரமாக முடியும் நேரத்தில் யாக குண்டத்திலிருந்து தோன்றிய விஷ்ணு தூதர், ஒரு சிறு கிண்ணத்தில் இருந்த பாயசத்தை தசரதனிடம் கொடுத்து, மனைவிகளிடம் பகிர்ந்து கொடுக்குமாறு கூறி மறைந்தார். தசரதனும் அந்த பாயசத்தின் பாதி பங்கை கௌசல்யாவிற்கும், கால் பங்கை சுமித்ராவிற்கும், எட்டில் ஒரு பங்கை கைகேயிக்கும் கொடுத்தார்; அதன்பின்னர் எஞ்சியிருந்த பாயசத்தை மீண்டும் சுமித்ராவிற்கு கொடுத்தார். ஒரே வருடத்தில் கௌசல்யாவிற்கு இராமரும், சுமித்ராவிற்கு லக்ஷ்மணர், சத்ருகனர் என இரட்டை மகன்களும், கைகேயிக்கு பரதரும் தெய்வீக மகன்களாகத் தோன்றினர்.

## தசரத மஹால்

மன்னர் தசரதர் வாழ்ந்த அரண்மனை தற்போது கோயிலாக உருவெடுத்துள்ளது. இக்கோயிலில் இலக்ஷ்மணர், பரதர், சத்ருகனர் ஆகியோருடன் கூடிய சீதா இராமரின் விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர்.

தச என்றால் பத்து என்றும், ரத என்றால் தேர் என்றும் பொருள்படும்.

தசரதன் என்றால் ஒரே சமயத்தில் பத்து திசைகளிலும் ரதத்தை செலுத்தி போர் புரியும் திறமை கொண்டவர் என்று பொருள். அத்தகு போர் வலிமை கொண்ட தசரதர், தேவர்களின் அழைப்பின் பெயரில் அடிக்கடி

அசுரர்களுக்கு எதிராக மேலுலகங்களில்கூட போரிடுவதுண்டு. சூரிய வம்சத்தில் வந்த தசரத மன்னர், கோசல மாகாணத்தை சிறப்பாக ஆட்சி செய்தார்.

சிறந்த தலைவர்களே நல்ல பிரஜைகளை உருவாக்க முடியும் என்பதற்கு தசரதரின் ஆட்சியும் ஸ்ரீ இராமரின் ஆட்சியும் சிறந்த முன்னுதாரணமாக திகழ்ந்தது. தர்ம நெறி முறைகளைக் கடைபிடிப்பதற்கு போதிய பயிற்சி பெற்றிருந்த மக்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமையை செவ்வனே ஆற்றி வந்தனர். உடலின் துன்பங்கள், மன ரீதியிலான துன்பங்கள், புலம்பல், பயம் போன்றவை முழுமையாக மறைந்து, மக்கள் அமைதியுடனும் செழிப்புடனும் வாழ்ந்து வந்துள்ளனர்.

எளிமையான பக்தர்களாக வாழ்ந்த மக்கள், இராமரிடம் முழுமையாக சரணடைந்திருந்ததால் அவரின் ஐஸ்வர்யத்திலும் உரிமையுடன் பங்கு கொண்டனர். இராமரின் ஆட்சியில் மக்கள் மட்டுமல்லாமல், அனைத்து ஜீவன்களும் கவலையில்லாமல் இன்புற்று வாழ்ந்தனர். அயோத்தியாவாசிகள் இராமரை தங்களது உயிர்மூச்சாக கருதி, அவரது சேவைக்காக எல்லா தியாகங்களையும் மேற்கொள்ளத் தயாராக இருந்தனர். அதுவே இராமராஜ்யம்.

## கனக பவன்

தசரத மஹாலுக்கு சற்று தொலைவில் அமைந்திருப்பது கனக பவன். இராமச்சந்திர பகவானின் திருமணத்திற்கும் கனக பவனுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இராமசந்திர பகவானுக்கு பதினாறு வயது ஆனபோது தசரதரின் அரண்மனைக்கு விஜயம் செய்த விஸ்வாமித்திரர், தன்னுடைய யாகத்திற்கு பாதுகாப்பாக, தன்னுடன் இராமரையும் இலக்ஷ்மணரையும் அனுப்பி வைக்கும்படி தசரதரிடம் கேட்டுக் கொண்டார். தசரதருக்கு மனம் இல்லாவிடினும், பிராமணருக்கு கொடுத்த வாக்கினைக் காப்பாற்றுவதற்காக, தன் உயிரினும் மேலான இராமரை இலக்ஷ்மணரின் துணையுடனும் வசிஷ்டரின் அனுமதியுடனும் அனுப்பி வைத்தார். அவர்களும் யாகத்திற்கு தடையாக செயல்பட்ட தாடகை, ஸுபாஹு எனும் அசுரர்களை வதம் செய்தனர்.

பின் விஸ்வாமித்திரர் இராமரை மிதிலைக்கு அழைத்து சென்று, ஜனக மன்னரின் மகளான சீதாதேவியின் சுயம்வரத்தில் கலந்து கொள்ள வைத்தார். சுயம்வரத்தில் இராமர் சிவபெருமானின் வில்லை தூக்கி உடைத்தபோது மூவுலகமும் அதிர்ந்தது. இராமர் சீதாதேவியை மணந்து அயோத்தியா வந்தபோது, அவர்களைக் கண்ட கைகேயி ஆனந்தத்தின் உச்சியில், கனக பவன் என்னும் ஆடம்பரமான மாளிகையை சீதாதேவிக்கு மணபரிசாக அளித்தாள்.

கனக என்றால் தங்கம் என்று பொருள், கற்பனைக்கு அப்பாற்பட்ட பேரழகுடன் தங்க மாளிகையாக ஜொலித்த கனக பவன், இன்றும் மஞ்சள் நிற வர்ணத்துடன் அழகுற விளங்குகின்றது. இதனை விட்டு வெளியே வர எந்த யாத்திரிகருக்கும் மனம் வராது. சீதாதேவி வாழ்ந்த இடம் என்பதால் கனக பவன் மிகவும் கருணை வாய்ந்த இடமாக அயோத்தியாவில் போற்றப்படுகிறது. இங்கு இராமரும் சீதையும் தங்க கிரீட கோலத்தில் காட்சியளிப்பது மிகவும் விசேஷமானதாகும்.

## கோப பவன்

இராம ஜென்ம பூமிக்கு போகும் வழியில் கோப பவன் அமைந்துள்ளது. அயோத்தியா செல்பவர்களில் பெரும்பாலான நபர்கள் கைகேயியின் இந்த மாளிகையினை வெளியிலிருந்து மட்டுமே பார்க்கின்றனர், உள்ளே செல்வதில்லை. ஏனெனில், இங்குதான் கைகேயி தசரதனிடம் தனது இரு வரங்களைப் பூர்த்தி செய்து கொண்டாள். தனது மகன் பரதனைக் காட்டிலும் இராமரின் மீது அதிக பற்றுதல் கொண்டிருந்த கைகேயி, புத்தி பேதலித்த காரணத்தினால், இராமர் 14 வருடங்கள் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்றும், பரதன் முடிசூட்டப்பட வேண்டும் என்றும் தசரதரிடமிருந்து வரம் பெற்றாள்.

பகவான் ஸ்ரீ இராமருக்கு முடிசூட்டுவதற்கான ஏற்பாடுகளை தசரதர் செய்து கொண்டிருந்த தருணம் அது. அப்போது வளைந்த உடலைக் கொண்ட மந்தாரை, கைகேயியை அணுகி மறுநாள் இராமரை அரியணையில் ஏற்றப் போகிறார்கள் என்ற செய்தியை தெரிவித்தாள். அந்த இன்ப செய்தியைக் கேட்ட கைகேயி தன்னையறியாமல், தன் கழுத்தில் இருந்த தங்க மாலையை கழற்றி மந்தாரைக்கு பரிசாகக் கொடுத்தாள். இதை கண்ட மந்த்ரா உடனடியாக கைகேயியை பார்த்து, “ஏன் முட்டாள்தனமாக செயல்படுகிறாய்? இராமர் அரியணையில் ஏறிவிட்டால் பரதனும் நீயும் வேலைக்காரர்களாக மாறிவிடுவீர்கள்” என விஷத்தை கக்கினாள்.

அந்த சமயத்தில் (பகவானின் தெய்வீக ஏற்பாட்டின்படி) புத்தியை இழந்த கைகேயி, இராமரை காட்டிற்கு அனுப்பவும் பரதனுக்கு முடிசூட்டவும் முடிவு செய்து, இதயத்தை கல்லாக்கிக் கொண்டு, கோப பவனில் தலைவிரி கோலத்துடன் தரையில் விழுந்து புரண்டு அழுதாள். தான் விரும்பிய இரு வரங்களை தசரதனிடமிருந்து எப்படியோ பூர்த்தி செய்து கொண்டாள். கூடா நட்பு எவ்வளவு பொல்லாதது என்பதை கூனியுடனான கைகேயியின் உறவிலிருந்து அறியலாம்.

## ஹனுமான் கடி

இங்கிருக்கும் குகைக் கோயிலில் ஹனுமானின் தாயாரான அஞ்சனா தேவியின் மடியில் குழந்தை ஹனுமான் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். எழுபதுக்கும் மேற்பட்ட படிக்கட்டுகளை கொண்ட இக்கோயில் அயோத்தியாவில் மிகவும் பிரபலமானதாகும். இவ்விடத்தில் நித்யமாக வசிக்கும் ஹனுமான், இராம ஜென்ம பூமியை பாதுகாக்கிறார். தினந்தோறும்பல்லாயிரக்கணக்கானபக்தர்கள் இக்கோயிலுக்கு வருகை புரிந்து பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

## குப்தார் காட்

இராமர் தனது இறுதி லீலையை சரயு நதியில் அரங்கேற்றினார்; அங்கிருந்துதான் அவர் நமது பௌதிக கண்களுக்கு மறைந்து போனார். இராமர் மறைந்த அந்த நதிக்கரை, குப்தார் காட் என்று அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் 300 வருடம் பழமை வாய்ந்த இராமரின் விக்ரஹம் வழிபடப்படுகின்றது. நரசிம்மர் மற்றும் ஹனுமான் கோயிலும் இந்த நதிக்கரையில் அமைந்துள்ளன.

## நந்திகிராம்

அயோத்தியாவின் ஒதுக்குப்புறத்தில், ஊரிலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ள நந்திகிராம், பகவான் இராமரின் மீதான பரதரின் மாசற்ற அன்பிற்கு இலக்கணமாகத் திகழ்கிறது. இராமர் 14 வருடங்கள் வனவாசம் மேற்கொண்டிருந்த தருணத்தில், இராமர் இல்லாமல் அயோத்தியாவில் வாழ விரும்பாத பரதன், அயோத்தியாவின் ஓரத்தில் உள்ள இவ்விடத்தில், ஒரு சிறு குடிசையை அமைத்து இராமர் காட்டில் மேற்கொள்ளும் அதே தவ வாழ்வினை (இன்னும் சொல்லப் போனால், அதைவிட அதிகமான தவ வாழ்வினை) மேற்கொண்டார்.

இராமரின் பாதுகைகளை அரியணையில் வைத்து, பரதன் 14 வருடம் இங்கிருந்து கொண்டே நாட்டை ஆண்டார். இராமர் அயோத்தியா திரும்பும் வரை, பரதன் இவ்விடத்தில் ஜடா முடியுடன் மரப்பட்டையை வஸ்திரமாக அணிந்து, பழம் மற்றும் கிழங்குகளை மட்டுமே உட்கொண்டார். இராமரின் காலத்தில் காடாக இருந்த நந்திகிராம் இப்போதும் நந்தவனம்போல காட்சியளிக்கிறது.

இவ்விடத்தில் பரத குண்டம் அமையப் பெற்றுள்ளது. இராமர் புஷ்பக விமானத்தில் அயோத்தியாவிற்குத் திரும்பிய போது, பரதரின் மனப்பான்மையினை ஹனுமானின் மூலமாக அறிந்து கொண்ட பிறகு, நந்திகிராமத்தில் தரையிறங்கினார்.

அப்போது இராமரைக் கண்ட பரதன் அவரை நமஸ்கரித்து உணர்ச்சி பொங்க தழுவிக் கொண்டார். அயோத்தியாவாசிகள் அனைவரும் நந்திகிராமிற்கு வருகைப் புரிந்து இராமரை வரவேற்றனர்.

அயோத்தியாவாசிகள் இன்றும் ஸ்ரீ இராமரின் நினைவில் வாழ்கின்றனர். எங்கு சென்றாலும், இராம நாமம் தெளிவாக ஒலிக்கின்றது. அயோத்தியாவில் தங்கும் அனைவரும் இராமாயணம் நமக்கு வழங்கியிருக்கும் நல்ல அறிவுரைகளையும் பக்தி மார்க்கத்தையும் நினைவு கொள்ளாமல் இருக்க முடியாது.

தற்போது இராமபிரானின் கோவில் கட்டும் பணி துவங்க உள்ள இத்தருணத்தில் வாய்ப்பு கிடைத்தால் ஒருமுறை குடும்பத்துடன் இராமன் வாழ்ந்த இடத்தை பார்க்க புறப்படுவோம்.

# அண்ணாமலையார் ஆன்மிக குழுவினரின் தைபூச அன்னதான விழா தொடக்கம்

அசுரர்களை அழிப்பதற்காக அன்னை பார்வதி தேவியிடம் இருந்து முருகப்பெருமான் வேல் வாங்கிய தினமான தைப்பூசம் திருவிழா வருகிற 2020 பிப்ரவரி 8 ஆம் ந்தேதி முருகன் தலங்களில் கொண்டாடப்பட உள்ளது. தமிழகத்தில் உள்ள முருகன் தலங்களில் தைப்பூசம் விழா பழனியில் மிக கோலாகலமாக கொண்டாடப்படும்.

பக்தர்கள் தைப்பூசத்தை முன்னிட்டு விரதம் இருந்து காவடியை சுமந்தபடி பாத யாத்திரையாக பழனி முருகன் கோவிலுக்கு செல்வது வழக்கம். ஆண்டுக்கு ஆண்டு பாத யாத்திரை பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தப்படி உள்ளது.

அப்படி செல்லும் பக்தர்களின் பசியை போக்குவதற்காக வழிநெடுக ஏராளமானோர் குடிநீர், பிஸ்கட் பாக்கெட், பழ வகைகள் போன்றவற்றை தானமாக கொடுப்பது உண்டு. சில அமைப்புகள் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கு கிறார்கள்.

சென்னையில் உள்ள அண்ணாமலையார் ஆன்மீக வழிபாட்டு குழு கடந்த 9 ஆண்டுகளாக பழனி பாத யாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் உள்பட பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. தற்போது 10வது ஆண்டாக அன்னதானம் வழங்க அந்த குழுவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் சன்னதி அருகே உள்ள எல்.என். திருமண மண்டபத்தில் வருகிற 2020 பிப்ரவரி 5,6 தேதிகளில் அன்னதானம் நடைபெறுகிறது. இதற்காக அந்த திருமண மண்டபத்தில் “பழனி முருகன் அன்ன தான குடில்” அமைக்கப்பட உள்ளது.

அங்கு 2020 பிப்ரவரி 5ந்தேதி மாலை பக்தி இன்னிசை, கூட்டு வழிபாடு ஆகியவற்றுடன் அன்னதானம் தொடங்குகிறது மற்றும் பிப்ரவரி 6ந்தேதி காலை 9 மணிக்கு மகாசக்தி பூஜை, வேல் பூஜை, வேல்மாறல் பாராயணம் நடத்தப்படுகிறது. இதைத் தொடர்ந்து காலை 10 மணி வரை பழனி பாத யாத்திரை பக்தர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும். மதியம் 12 மணியில் இருந்து பக்தர்களுக்கு வாழை இலையில் அன்னதானம் வழங்கப்படும்.

அன்னதான குடில் பகுதியில் பக்தர்களுக்கு மருத்துவ முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இந்த அன்னதான சேவையில் யார் வேண்டுமானாலும் கலந்து கொண்டு உதவி செய்யலாம் என்று அண்ணாமலையார் ஆன்மிக குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிதி உதவி செய்ய இயலாத பக்தர்கள் அன்னதான சேவையில் பங்கேற்று தங்களால் முடிந்த பணிகளை செய்யலாம். இந்த சேவையில் விருப்பம் உள்ள பக்தர்கள் 99443 09719, 98421 98889, வாட்சப் எண் 9840305522 எண்களில் தொடர்பு கொண்டு கூடுதல் தகவல்களை பெறலாம்.



கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுன்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
GET IT ON Google Play





ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# அசுரர்களுக்கு கடவுள் உதவியது ஏன்?

எவ்வளவு சாஸ்த்திரம் படித்திருந்தாலும் கடவுளின் வெகு அருகே வாழ்நாள் முழுதும் இருந்தாலும் பக்தி வருவதில்லை. குரு என்ற ஒருவன் வந்து உங்களை அழுத்தினால் தான் பக்தி வெள்ளத்தில் மூழ்குகிறீர்கள்.

❖❖❖

கோவிலுக்குள் கல்லால் கடவுளிருந்தது என்று சொன்னால் நீ பண்டிதன். கல்லிலே கடவுள் இருக்கிறான் என்று சொன்னால் அது நம்பிக்கை. எல்லாம் கடவுள் மயம் என்றால் அது ஞானம்.

❖❖❖

கடவுள் பக்தனுடைய நல்ல குணமான பக்திக்காகவே அவனுக்கு உதவுகிறான். அதனால் தான் சில சந்தர்ப்பங்களில் தவறு என்று கருதப்படும் காரியங்களுக்கும் கடவுள் உதவி செய்திருக்கிறான். அசுரர்களுக்கு உதவியது இப்படியே.

❖❖❖

கடவுளை நம்பி பக்தி செய்து கொண்டு நாம் ஒவ்வொரு செயல்களையும் செய்து கொண்டே வந்தால் நமது செயல்களில் தவறு நடப்பதே இல்லை.

❖❖❖

ஆணியை சுத்தி அடிக்கிறது. சுத்திக்கும் ஆணிக்கும் விரோதமா? இல்லை. அதுபோல் உனக்கு புத்திமதி சொல்லுகின்ற புத்தன், உனக்கு நண்பனே என்று எண்ணு.

❖❖❖

வல்லமை வெளியிலில்லை என்பவர்களுக்கு வல்லமை உள்ளேயே இருப்பதால், வல்லமை உள்ள விநாயகன் வெளியிலில்லை.

❖❖❖

சாப்பாடு போட முடிவு எடுத்தவன் உனக்கும் எப்படியும் சாப்பாடு போட்டு விடுவான். கடவுளை நம்பிய பின் அவன் புத்தியைத் தந்து ஞானத்தைத் தந்தாலும், ஞானத்தைத் தந்து புத்தியைத் தந்தாலும் எனக்கு ஒன்றே.

❖❖❖

கடவுளை மனித உள்ளத்தில் நுழையவிடுவதே தர்மம், புண்ணியம் இறைபணி. இதைத் தவிர வேறு எது நுழைந்தாலும் அதுவே பாபம். அதுவே அதர்மம்.

❖❖❖

பக்தி ரசத்துடன் கடவுளைப் பார்த்தால்தான் கடவுள் புரியும்; மனிதனுக்குத் தன்னையும் புரியும். இல்லை என்றால் கடவுள் பக்திக்கு பூஜை வேண்டும். சடங்கு சம்பிரதாயம், ஜாதி சமயம் இவைகள் வேண்டும் என்று தோன்றும்.

❖❖❖

மனித வர்க்கமே பக்தி செய்யுங்கள். பக்தி செய்து சமயத்துக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கும் கடவுளுக்கு விடுதலை கொடுங்கள்.

❖❖❖



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

உடல் ஆரோக்கியத்திற்கு அற்புத மருந்தாக உதவும்

# சூரிய குளியல்

தினசரி நடைமுறை வாழ்க்கை மாறிவிட்ட இந்த நாளில் அலுவலகத்திலோ வீட்டிலோ மந்தமான வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சூரிய வெளிச்சம் உடலில் படுவது மிகவும் குறைந்து விட்டது. எனவே சூரிய வெளிச்சம் குறைவாகவோ அல்லது முழுமையாக படாமலேயே இருக்கும் நிலையில் உள்ளவர்கள் ஆன்மீக நிவாரணமாக சூரிய குளியல் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## 1. ஆயுர்வேதப்படி சூரிய குளியலினால் ஏற்படும் நன்மைகள்

அ. சூரியதேவன் நமக்கு நல்ல ஆரோக்கியத்தை அருளும் வல்லமை உள்ளவர். எனவே சூரியதேவனை ஆரோக்கியத்திற்காக வேண்டுங்கள் என்ற பொருள் கொண்ட ‘ஆரோக்கியம் பாஸ்கராத் இச்சேத்’ என்ற வாக்கியம் வழக்கில் உள்ளது.

ஆ. ஆயுர்வேதப்படி தற்காலத்தில் உடலில் அக்னி தத்துவம் குறைவாக இருப் பதாலோ அல்லது கருப்பு சக்தியால் மூடப்பட்டிருப்பதாலோ சர்க்கரை வியாதி, அதிக ரத்தக்கொதிப்பு, வைட்டமின் குறைவு, அளவிற்கு மீறிய உடல் பருமன், தோலின் மேல் ஏற்படும் வியாதிகள், பல்வேறு அலர்ஜிகள், மூட்டுவலி, உடலில் வீக்கம் ஏற்படுதல், அமிலங்களால் ஏற்படும் தைராய்டு போன்ற வியாதிகள், ஜீரணக் குறைவு, மூலவியாதி, மலச்சிக்கல் போன்ற பல்வேறு நோய்கள் ஏற் படுகின்றன. சூரியக்குளியலினால் அக்னி தத்துவத்தின் மீது மூடியுள்ள கருப்பு சக்தி ஆவரணம் விலகுகிறது. அதனால் அக்னி தத்துவம் செயல்படத் துவங்கி மேற்குறிப்பிட்ட வியாதிகளால் உடல் பாதிக்கப்படாமல் இருக்க உதவுகிறது.

இ. அவ்வப்பொழுது தொடர்ந்து தேவைப்பட்ட அளவு சூரியகுளியல் எடுத்துக் கொள்வது உடலில் ஏற்படும் தோஷங்களை (நோய்களை உண்டாக்கும் விஷங்கள்) நீக்க உதவும்.

## 2. சூரிய கதிர்களின் தன்மைகள்

அ. சூரிய கதிர்கள் உஷ்ணமாகவும், ஒளி மிக்கதாகவும், ஈரப்பசை அற்றதாகவும், ஊசி முனை போன்று உடலை துளைக்க வல்லதாகவும் உள்ளது.

ஆ. காலை, மதியம் ஆகிய இரு வேளைகளிலும் சூரியனின் ஒளிக்கதிர்கள் மேலே குறிப்பிட்ட தன்மை உள்ளனவாக உள்ளன. ஆனால் அதன் ஒளிக்கதிர்களின் வெப்பம் காலையில் குறைந்தும் மதியத்தில் மிகுந்தும் இருக்கும்.

இ. கோடைக் காலத்தில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் குறை வாக இருப்பதால் மதியம் அதன் வெப்பத்தின் பாதிப்பு அதிகமாக உள்ளது. குளிர் காலத்தில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் அதிகமாக இருப்பதால் மதியம் வெப்பத்தின் பாதிப்பு குறைவாக உள்ளது.

ஈ. மத்திய ரேகைக்கு அருகாமையில் உள்ள நாடுகளில் வெப்பம் அதிகமாகவும் மத்திய ரேகையை விட்டு தூரம் செல்ல செல்ல அங்குள்ள நாடுகளில் வெப் பம் குறைவாகவும் இருக்கும்.

உ. ஈரப்பசை உள்ள கடலோரப் பகுதிகளில் சுற்றுப்புற சூழலில் காணப்படும் ஈரப் பசையின் காரணமாக சூரிய வெப்பம் உடலைத் துளைக்காமல் மிதமாக உள்ளது. வறண்ட தட்பவெட்ப நிலை யில் (உதாரணத்திற்கு விதர்ப்ப, மராத் வாடா) சுற்றுப்புற சூழல், ஈரப்பசை அற்றதாக உள்ளதால் சூரிய கதிர்கள் உடலைத்துளைக்கும்வண்ணம் தகித்து உடலை பாதிக்கிறது.

## 3. பருவ காலங்களுக்கு ஏற்றவாறு சூரிய குளியலை மேற்கொள்ளும் வழக்கம்

அ. தீபாவளி பண்டிகைக்குப் பிறகு குளிர் காலம் துவங்குவதால் சுற்றுசூழ லின் குளுமை மதியம் வரை தொடர்கிறது. அச்சமயம் ஏதேனும் சூடான பானம் அருந்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. அம் மாதிரி குளு மையான பருவகாலம் நீடிக் கும்வரை நீங்கள் மதிய வேளை சூரிய வெப் பத்திலும் நன்றாக உணர்ந்தால் சூரிய குளியல் மேற்கொள்ளலாம்.

ஆ. குளிர்காலம் முடியும் சமயத்தில் வசந்தகாலம் துவங்குகிறது. இந்த பருவ நிலை உடலில் ஈரப்பசையை அதிகரிக்கச் செய்கிறது. அதை வெளியேற்ற உங்களுக்கு எவ்வளவு நேரம் சூரிய வெப்பத்தை பொறுத்துக் கொள்ள முடிகிறதோ அவ்வளவு நேரம் நீங்கள் சூரியகுளியல் மேற் கொள்ளலாம்.

இ. கடும் கோடைக் காலத்தில் அதிக வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. எனவே அதிகாலை இளம் சூரிய வெப்பத்தில் சூரிய குளியல் செய்யலாம். மதிய வேளை சூரிய வெப்பம் உடலில் பித்தத்தை அதிகரிக்க செய்து அதன் விளைவாக உடல் சோர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அந்த நேரத்தில் சூரியகுளியல் செய்வதை தவிர்க்கவும்.

ஈ. மழைக்காலத்தில் சீதோஷ்ணநிலை மேகமூட்டம் சூழ்ந்ததாக இருக்கும். அதிக அளவு மழை பொழியும் காலத்தில் அதன் பயனாக சூழ்நிலையில் குளுமை அதிகமாக இருக்கும். அம்மாதிரியான நேரங்க ளில்மேகமூட்டம் கலைந்து சூரியன் தோன்றினால் குளிருக்கு இதமாக சூரியகுளியல் செய்யவும். மழைக்காலத்தில் சூரியன் பூமிக்கு அருகாமையில் இருப்பதால் வெப்பத் தின் அடர்த்தி அதிகமாக இருக்கும். எனவே அதிக நேரம் சூரிய வெப் பத்தில் இருப்பதை தவிர்க்கவும்.

உ. மழைக்காலத்தில் இருந்து தீபா வளி வரை உள்ள காலம், சரத்ருது எனப்படுகிறது. இந்தப் பருவ காலத்தில் வெப்பம் திடீரென அதிகரிப்பதால் இது ‘அக்டோபர் வெப்பம்’ எனப்படுகிறது. எனவே இந்த நேரங்களிலும் சூரியகுளியலை தவிர்க்கவும்.

ஊ. எந்தப் பருவ காலமானாலும் சூர்யோ தய வேளை அல்லது சூரியஅஸ்தமன வேளை ஆகிய இரு நேரங்களும் சூரிய குளியலுக்கு உகந்த நேரங்களாகும்.

## 4. அலோபதி முறையில் சூரிய கதிர்களைப் பற்றிய ஆராய்ச்சி

அ. உடலுக்கு வைட்டமின் டி கிடைப்பதற்கு சூரிய வெளிச்சம் அல்லது வெப்பம் தேவை. நீங்கள் வைட்டமின் டி மாத்திரை களை உட்கொண்டாலும் கூட சூரியனின் கதிர்கள் உங்கள் உடலில் படும்படி சூரியகுளியலை மேற் கொண்டால்தான் அது உங்களுக்கு பயன் அளிக்கும். இல்லையெனில் வைட்டமின் டி மாத்தி ரையினால் உங்களுக்கு ஒரு பயனும் ஏற்படாது.

## 4. சூரிய வெப்பத்தில் யு.வி.ஏ., யு.வி.பி., யு.வி.ஸி. (UVA, UVB,UVC) என்ற அல்ட்ரா வயலட் கதிர்கள் அடங்கியுள்ளன.

❖ மேற்குறிப்பிட்ட அல்ட்ரா வயலட் கதிர் களில் யு.வி.பி. அல்ட்ரா வயலட் கதிர்கள் மட்டுமே உடலில் வைட்டமின் டி ஐ உண் டாக்கும் சக்தி உள்ளதாக உள்ளது. இந் தக் கதிர்களின் நீளம் 280 315 வரை நானோ மீட்டராக உள்ளது. இந்த நானோ மீட்டர் என்பது சூரியனின் அல்ட்ரா வயலட் கதிர்களின் நீளத்தை அளக்கும் அதி சூட்சுமமான அளவீடாகும்.





- பாரத தேசத்தில் சூரியனின் இந்த யு.வி.பி. அல்ட்ரா வயலட் கதிர்கள் காலை 11 மணியிலிருந்து மதியம் 1 மணி வரை சூரிய வெப்பத்தில் காணப்படுகிறது.
- சூரியனின் ஒளிக்கதிர்கள் நேரடியாக உடலில் பட்டாலே வைட்டமின் டி உடலில் உற்பத்தியாகும். வானிலை மேகமூட்டத்துடன் இருக்கும் நேரங்களில் சூரியனின் ஒளிக்கதிர்கள் நேரடியாக உடலின் மேல் பாகத்தில் தோலின் மீது படுவதில்லை. எனவே இந்த நேரங்களில் சூரிய குளியலினால் உடலில் வைட்டமின் டி உற்பத்தியாவதில்லை.
- யு.வி.ஏ., யு.வி.பி., யு.வி.ஸி. என்ற மூன்று விதமான அல்ட்ரா வயலட் கதிர்களின் மூலமும் தோலில் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புண்டு.
- நாள்தோறும் கைகள், கால்கள், முகம் போன்ற உடலின் பாகங்கள் அதிக நேரம் கடுமையான சூரிய வெளிச்சம் படும் சூழ்நிலையில் தோல் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பும் அதிகம். அதே சமயத்தில் அதிக சூரிய ஒளி படாத உடலின் முதுகுப்புறம், வயிறு, தோள்கள் போன்ற உறுப்புகளை சூரிய ஒளி படுமாறு சூரியகுளியல் எடுத்துக் கொள்ளவும் வேண்டும்.

### 5. கவனத்தில் கொள்ள வேண்டிய சூரியகுளியலைப் பற்றிய குறிப்புகள்

அ. உடல் ஆரோக்கியத்திற்கு தினமும்சூரிய வெப்பம் உடலில் படுவது அவசியமாக இருப்ப தால் அம்மாதிரி வாய்ப்பு இல்லாதவர்கள் நாள்தோறும் 15–20 நிமிடங்கள் வரை சூரிய குளியல் மேற்கொள்ளுமாறு பரிந் துரைக்கப் படுகிறது.

ஆ. பருவ காலங்களுக்கு ஏற்றவாறு அமைக் கப்பட்ட சூரியகுளியல் முறைகளை அனுசரித்து அவற்றை மேற்கொள்வது நல்லது.

இ. சூரிய வெப்பத்தை உங்கள் உடல் பொறுத் துக் கொள்ளும் வரையே சூரியகுளியலை மேற்கொள்ளவும். சூரிய வெப்பத்தை உங்கள் உடல் தாங்க முடியாதபோது மகான்களின் நடைமுறை பழக்கங்களை மதிக்காது அலோபதி முறையில் ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ளார்கள் என்ற காரணத்திற்காக மட்டும் வெப்பம் மிகுந்த மதிய வேளையில் சூரிய குளியலை மேற்கொள்ளாதீர்கள். (சூரியகுளியல் நிவாரண முறை நல்ல ஆரோக்கியம் பெறுவதற்காக மட்டுமே ஏற்பட்டது. எனவே சூரிய குளியலினால் உடலுக்கு வைட்டமின் டி கிடைக்கும்; அதே நேரத்தில் மற்ற எதிர்மறை பாதிப்புகள் ஏற்படாதவாறு கவனமாக இருப்பது நல்லது.)

ஈ. எனவே வைட்டமின் டி உடன் மற்ற எல்லா வைட்டமின்களும் தேவையான அளவு உடலுக்கு கிடைப்பதற்கு உடலின் அக்னி தத்துவத்தை பாது காப்பது அவசியமாகிறது. உடலின் அக்னி தத்துவம் ஆரோக்கிய நிலையில் இருக்கும் சமயத்தில் உடலில் வைட்டமின் குறைவு ஏற்பட வாய்ப் பில்லை. எனவே இந்த நிலையை பாது காக்க நீங்கள் பின்பற்ற வேண்டிய 3 விதிகள் பின்வருமாறு :

1. இரவில் நேரத்துடன் உறங்கி அதி காலைப் பொழுதில் விழித்தெழ வேண் டும். பிற்பகல் உறக்கத்தைத் தவிர்க்கவும்.
2. நன்கு பசி எடுக்கும்போது மட்டுமே உணவு உட்கொள்ள வேண்டும். மற்ற நேர ங்களில் பசியில்லாதபோது ஒரு கவளம் உணவு கூட உட்கொள்ளக் கூடாது.
3. அடிக்கடி தண்ணீர் அருந்தாமல் தாகம் எடுக்கும்போது மட்டுமே தண்ணீர் அருந்த வேண்டும்.

உ. சூரியகுளியல் எடுக்கும்போது அலோபதி முறையான ஆராய்ச்சிப்படி தோல் புற்றுநோய் வந்து விடுமோ என்று அஞ்சாதீர்கள். அக்னி தத்துவம் உடலில் நன்கு செயல்படும் வரை நோய்கள் அணுகாது. அவ்வாறு உடலின் அக்னி தத்துவத்தைப் பாதுகாக்க மேற்குறிப்பிட்ட 3 விதிகளை அதிக கவனத்துடன் பின்பற்றுங்கள்.

– வைத்தியர் மேகராஜ் மாதவ் பரட்கர்,
ஸனாதன் ஆச்ரமம், ராம்நாதி, கோவா.
மேலும் விவரங்களுக்கு:
hindujagruti தொ.எண்: 9380949626





# தாம்பரம் மாடம்பாக்கத்தில் ஸ்ரீசேஷாத்ரி சுவாமி ஆராதனை விழா

நினைத்தாலே முக்தி அளிக்கும் திரு வண்ணாமலை திருத்தலத்தில் இறைவனோடு இரண்டறக் கலந்து தெய்வீக ஒளியை ஒளிரச் செய்து வரும் மகான் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்.

இவர் 1870ஆம் ஆண்டு காஞ்சியில் காமகோடி வம்சத்தில் பிறந்து 1929–ம் ஆண்டு திருவண்ணாமலையில் முக்தி அடைந்தவர். ரமண மகரிஷியை முருகன் அம்சமாகவும், ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகளை ஸ்ரீ அம்பாள் அம்சமாகவும் கூறுவார்கள். நாடி ஜோதிடத்தில் சுவாமிகளை அபிராம பட்டரின் மறு அவதாரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. 10 வயதிலேயே சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர் நம் மகான்.

அவரது தாயார் பிறக்கும் முன்பாக அருணாசல, அருணாசல, அருணாசல என்று மூன்று முறை கூறிய சொற்களே முக்திதலமான திருவண்ணாமலைக்கு செல்ல அழைப்பு வந்து விட்டதாக எண்ணி ஆன்மீக வாழ்க்கைக்கு தன்னை தயார் செய்து கொண்டார். 19 வயதில் திருவண்ணாமலைக்கு வந்த சுவாமிகள் 40 ஆண்டு காலம் அங்கேயே இருந்து எண்ணற்ற அற்புதங்களை நடத்தி மக்களுக்கு உபதேசங்களை செய்து ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

அப்படிப்பட்ட மகானுக்கு சென்னையில் தாம்பரம் அருகே மாடம்பாக்கம் என்ற ஊரில் ஸ்ரீ சக்ரமகாமேரு சக்திபீட பிருந்தாவனம் அமைந்துள்ளது. மகாமேருவை மையமாக கொண்டு அம்பிகையின் இருபுறத்தில் ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளும் குருவாயூர் கிருஷ்ணனும் தனி, தனி சன்னதியில் அருள் பாலிக்கிறார்கள். மேலும் 18 சித்தர்களும், ஸ்ரீ ராஜகாளி அம்மனும் சமய குரவல் நால்வரும், நாகதோஷம், காலசர்பதோஷம் போக்கும் திருநாகேஸ்வரத்தில் அமைந்துள்ளபடி நாகராஜர் சன்னதியும், ஸ்ரீ ராமர், ஸ்ரீ ஆஞ்சநேயர் உள்பட பல சன்னதிகள் அமைந்துள்ளன.

இவ்வாண்டு டிசம்பர் மாதம் 19, 20 ஆகிய தேதிகளில் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகளின் மகா ஆராதனை விழா மிகச்சிறப்பாக நடைபெற உள்ளது. கணபதி ஹோமம், கோ பூஜையுடன் தொடங்கி ஏவல், பில்லி சூன்யம், பூதம், பிசாசு, இவைகளால் ஏற்படும் மரணபயம், எதிரிகளால் தொல்லை, தீராத வழக்குகள், மன அமைதி குறைவு, தீராத நோய்கள் எல்லாம் நிவர்த்தியாகும் விசேஷமான மகா ஹோமங்கள் நடைபெறவுள்ளது. இந்த ஹோமங்களில் கலந்துகொண்டு பொதுமக்கள் நற்பலன்கள் பல அடையலாம்.

அன்னதானம் நடைபெறுகிறது. மேலும் மகானின் ஆராதனை, ஸ்ரீ தேவி திருக்கல்யாணம், சௌபாக்ய லஷ்மி பூஜை, தங்கபாதுகை பூஜை, சேஷாத்ரி சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேகம் அனைத்தும் நடைபெற உள்ளது. அன்பர்கள் அனைவரையும் சக்திபீடத்தின் ஸ்தாபகர் குருஜி.சர்மா அவர்கள் அன்புடன் அழைக்கிறார். மேலும் விபரங்களுக்கு : 9841024989/ 044–24938734





# தனித்து வாழாதீர்கள். ஒதுங்கி போகாதீர்கள்

- ❒ வாழ்க்கை இன்னதென்று அறியாமல், குறிக்கோள் ஏதும் இல்லாமல் மிருகங்கள் வாழ்கின்றன. மனிதனும் அப்படி விலங்கு வாழ்க்கை வாழ்வது அர்த்தமில்லை.
- ❒ அடுத்தவர்களின் குறைகளைக் களைவதில்தான் நம் கவனம் அனைத்தும் செல்கிறது. நம் குறை களை முதலில் களைய முற்படுவதே பயனுடைய தாகும். நம்மீது குற்றம் என்பதே இல்லை என்ற உயரிய நிலையை எட்டுவதே நம் கடமையாகும்.
- ❒ பெற்றோரை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் நீங்கள் தாய் தந்தையர் ஆகும்போது, உங்களை உங்கள் பிள்ளைகள் மதிப்புடன் நடத்துவார்கள்.
- ❒ மண்ணில் பிறக்கும் உயிர்களில் மனிதப்பிறவி தனிச்சிறப் புடையது. கடவுளின் கரங்களில் இருந்து இவ்வரிய கொடை யாகிய மனிதப்பிறவி என்னும் வெகுமதியை பெற்ற நாம், அதன் அருமையை உணராமல் வாழ்ந்தால், பெரும் பாவம் செய்தவர்களாகி விடுவோம்.
- ❒ மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம். அவ்வாறில்லாமல் அலைபாய விட்டால் உண்டாகும் ரோகம். இன்றைய மனிதன் புலனடக்கம் இல்லாததால் உலக சுகங்களில் மூழ்கி தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.
- ❒ சிலர் காலை மடக்கி உட்காருதல், ஒற்றைக் காலில் நிற்றல் இதைத்தான் யோகாசனம் என்று எண்ணிக் கொண்டி ருக்கிறார்கள். உண்மையான யோகம் என்பது உயர்ந்த அன்புணர்வோடு இறைவனோடு நம்மை இணைத்துக் கொள்வதாகும்.
- ❒ அன்பால் இதயத்தை நிறைத்திருக்கும் மனிதனையே இறைவன் விரும்புகிறார். உண்மையோடும், பக்தியோடும் இருக்கும் மனிதர்களை இறைவனே தேடிவந்து விடுவார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருள்வார்.
- ❒ தாய் தன் குழந்தைகளின் தேவைகளை கேட் காமலே, வலிந்து செய்வது போல நாமும் பக்தியில் இறைவனின் குழந்தைகளாக மாறுவோம்.
- ❒ தனித்து வாழாதீர்கள். ஒதுங்கி போகாதீர்கள். மனம் விட்டு பேசுங்கள். ஒற்றுமை உணர்வுடன் எல் லோருடனும் உறவாடுங் கள். பரஸ்பர அன்பினால் நம் வாழ்வு ஒளியுடையதாகும் என்ற உண்மையை உணருங்கள்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com